மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 2 / பிப்ரவரி 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## காங்கிரசின் உயர்ந்த கொள்கைகளை தூக்கிப்பிடிப்பேன்

தமிழக காங்கிரஸ் புதிய தலைவர்

**கே.எஸ்.அழகிரி**



## சமூக நீதியை காவு வாங்கவே

உயர் வகுப்பினருக்கு இடஒதுக்கீடு

தொல்.திருமாவளவன் உரை



## கலைஞர்

தமிழ் இனத்தலைவர் என ஏன் போற்றப்படுகிறார்!





JALADHI FOUNDATION FIRST EVENT

Jaladhi foundation team visited the RASS old age home Murugappa nagar thiruttani at 7 PM on 09-01-2019. He issued saree with blouse for 30 women and 15 leprasy affected men. This was the first event organised in a service oriented manner with blessing and chief guest for this event was honorable DSP Mr. Sekar, Thiruttani. PARTICIPANTS: Mr. K.Kalai Thendral, ME. Treasurer, Dr.P.Renuga, BHMS,Registration number A"3867 Managing Trusty and Jaladhi Uma Sankar family.






JALADHI FOUNDATION SECOND EVENT : On behalf of 9th Anniversary of National voter's day, Voter's day pledge was taken by RTO V. Bavanandhi and followed by NSS students of Dr. Radha Krishna boys hr sec school and Arulmigu Sri Subramania Swami Government arts college NCC students Thiruttani. At 9 A.M Rally conducted from kamala theater Junction to corporation office via railway station and market, inaugurated by RTO V. Bavanandhi, Thasildar, M. Chengala. Chief guest were DSP, Mr. Sekar Thiruttani, and the participants were Deputy Thasildar Madhi Alagan , Arts college vice principal Thiru. Kalai Nesan and Thiruttani VAO.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly February 2019

ஆசிரியர்
**விசவனூரர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

வரலாற்றுப் பிழை (தலையங்கம்)........ 4

காங்கிரசின் உயர்ந்த கொள்கைகளை தூக்கிப் பிடிப்பேன்
தமிழக காங்கிரஸ் புதிய தலைவர் கே. எஸ். அழகிரி........ 6

நற்றவவானினும் நனிசிறந்த தமிழ்மீது ஆர்வம் கொண்டவர்
திரு.பீமபெருமாள்
– வி.ஜே. ஜார்ஜ்........8

நாங்கள் ஏன் தமிழ் கற்கிறோம்?
– விடையளிக்கும் ஃபேஸ்புக்கில் வைரலான சீனர்கள்........ 9

எதிலும் பெர்ஃபெக்சனிஸ்ட்டா நீங்கள்? மன அழுத்தமாம் எச்சரிக்கை
– டிக்சன்........ 12

ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட இருந்த
உச்ச நீதிமன்ற நீதிபதிகள்
வைகோ வாதத்திற்குப் பின் வழக்கை ஒத்தி வைத்தனர்........ 14

புதுமாதிரிக் கவிதைகள் புத்தகம் பற்றி நிறைவான ஒரு அலசல்........16

பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்ப்பற்று........ 18

மார்வாடி தேசமாகும் சேலம்
– சேலம் விஜய்........20

மாசிக் கருவாடு
– டாக்டர் கே.பி. அர்ச்சுணன்........ 23

கலைஞர் அவர்கள் தமிழ் இனத்தலைவர் என ஏன் போற்றப்படுகிறார்!
– சைதை மணிமாறன்........ 25

சமூக நீதியை காவு வாங்கவே உயர் வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு
– முனைவர். தொல்திருமாவளவன் உரை........28

அரசு அதிகாரங்களில் இருக்கும் அரசியல் வாதிகளுக்கு
ஓய்வூதியம் தேவையா? ........31

மருத்துவம்
– உமா மகேஸ்வரி........34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. – *ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# வரலாற்றுப் பிழை!

உயர்சாதியினருக்கு பத்து விழுக்காடு இட ஒதுக்கீடு என்று பெரும் மோசடியைச் செய்திருக்கிறது மோடி அரசு. இந்த இடஒதுக்கீட்டை உயர்சாதியினர் வரவேற்றி ருக்கிறார்கள். இதுவரைஇடஒதுக்கீடு என்பது தேவையற்றது. இடஒதுக்கீட்டினால் திறமை புறந்தள்ளப்படுகிறது என்றெல்லாம் கத்தி வந்த மனுவாதிகள் இப்போது இடஒதுக்கீட்டை வரவேற்கிறார்கள். காரணம் இரண்டு முதல் மூன்று விழுக்காடு இருக்கும் தங்களுக்கு பத்து விழுக்காடு இடஒதுக்கீடு கிடைத்திருக்கிறது என்பதால்தான்.

இட ஒதுக்கீட்டில் பொருளாதார அடிப்படை கூடாது என்பதுதான் சரியாக இருக்க முடியும். ஒவ்வொரு துறையிலும் உயர்சாதியினரைத் தவிர மற்ற அனைவருக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டே வந்திருக் கின்றன. கல்வித்துறையை எடுத்துக் கொண்டால், மனுவாதிகளின் மந்திரச் சொல்லாக இருப்பது சூத்திரனுக்கு கல்வியைக் கொடுக்காதே என்பது.

அதை மீறி வந்தாலும் சமற்கிருதம் படித்தால்தான் மருத்துவப் படிப்பில் சேரலாம் என்ற மோசடித்தனம். தற்போது நீட் என்ற ஒரு தந்திரம். இப்படி சமுதாயத்தில் மனிதனின் முன்னேற்றத்திற்கான முதற்படியாக இருக்கும் கல்வியை தங்கள் பிடியில் வைத்துக் கொண்டு, அதன் மூலம் மற்ற எல்லாத் துறைகளிலும் அவாள்களே



ஆண்டு வருகின்ற கதை இன்று வரையில் தொடர் கதையாகவே இருக்கிறது.

திரு. நடேசனார், பெரியார், ஓமந்தூர் இராமசாமி, அண்ணா, கலைஞர், வி.பி.சிங், எம்.ஜி.ஆர், போன்றோரின் பேச்சாலும், செயலாலும் உரியவர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளான இட ஒதுக் கீட்டினால் சமுதாயத்தின் கடைநிலையில் இருந்தவர்கள் கொஞ்சம் முன்னேறுவதைப் பார்த்து, ஐயகோ நமது வஞ்சகத்தனம் செயலற்றுப் போய்க் கொண்டிருக்கிறதே என்று எண்ணியவர்களின் சதிச்செயல்தான் 10% இடஒதுக்கீடு இதை நாம் எதிர்க்காது போனால், செயல்படவிட்டோமானால் நமக்குப் பின் வரும் தலைமுறை நம்மை மன்னிக்காது.

இடஒதுக்கீடு என்பதன் நோக்கம் புரிந்தும் உயர்சாதி வஞ்சகம் இன்று தேவையற்றோருக்கு ஒதுக்கீடு அளித்துள்ளது. 2014ஆம் ஆண்டு பாஜக ஆட்சி அமைத்தது. இந்த ஆட்சியில் அதிகாரத் தளத்தில் அமர்ந்திருக்கிறவர்கள் யார் யாரென்று நாம் கணக்கெடுத்துப் பார்த்தால் இருப்போருக்கே அள்ளிக் கொடுக்கும் நிலையை சிறுபிள்ளையால் கூட புரிந்து கொள்ள முடியும்.

முக்கிய அமைச்சர் பதவிகளான நிதித்றை அமைச்சர் அருண் ஜெட்லி ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், மனிதவளத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், நிர்மலா சீத்தாரமான ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், (இவருக்கு முன்பு இருந்த மனோகர் பாரிக்கர் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர்) பெட்ரோ கெமிக்கல் அமைச்சர் ஆனந்த் குமார் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், மத்திய சிறு / குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், டெக்ஸ்டைஸ் அமைச்சர் ஸ்மிரிதி இரானி ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், வர்த்தக அமைச்சர் சுரேஷ் பிரபு ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், லோக் சபா ஸ்பீக்கர் சுமித்ரா மகாஜன் ஒடுக்கப்பட்ட பார்ப்பனர், அனந்த குமார் ஹெக்டே, அஸ்வினி சுபே என்று வாழ்வுக்கே வழியில்லாதவர்கள் அமைச்சர்களாக குந்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தேவையா என்பதை இந்திய மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

இடஒதுக்கீடு வறுமையை ஒழிக்கும் என்பதற்காகவோ, பொருளாதாரத்தை உயர்த்தும் என்பதற்காகவோ தரப்படுவதல்ல. இந்நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் சமமான உரிமையை வழங்கும் ஒரு கோட்பாடாகும். எல்லாத்துறைகளிலும் அவரவருக்கு உரியதை வழங்க வேண்டும் என்பதுதான் இட ஒதுக்கீட்டின் அடிநாதம்.

**இடஒதுக்கீடு வறுமையை ஒழிக்கும் என்பதற்காகவோ, பொருளாதாரத்தை உயர்த்தும் என்பதற்காகவோ தரப்படுவதல்ல. இந்நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்களுக்கும் சமமான உரிமையை வழங்கும் ஒரு கோட்பாடாகும். எல்லாத்துறைகளிலும் அவரவருக்கு உரியதை வழங்க வேண்டும் என்பதுதான் இட ஒதுக்கீட்டின் அடிநாதம்.**

உலக வங்கி 2015ஆம் ஆண்டு தந்த அறிக்கையின் படி 58விழுக்காடு இந்தியர்களின் ஓராண்டு வருமானம் 79,200க்கும் குறைவு. 23 விழுக்காட்டினருக்கு ஆண்டு வருமானம் 32,000க்கும் குறைவு. இந்திய மக்களின் நிலை இவ்வாறு இருக்கும்போது ஆண்டுக்கு எட்டு இலட்சம் வருமானம் பார்க்கும் பார்ப்பனர்களுக்கு இட ஒதுக்கீடு தருகிறார்கள் என்றால், இவர்களெல்லாம் மனிதர்களா? நடக்கும் ஆட்சி அறம் சார்ந்து நடக்கும் ஆட்சியா? இவர்கள் இன்னும் அதிகாரத்தில் இருக்கலாமா? தவறுகள் என்று தெரிந்தால் அதை திருத்திக் கொள்வது என்பது நல்ல முன்னுதாரணம் ஆனால், செயல் வடிவத்திற்கு முன்னரே அது தவறு என்று தெரிந்தும் செய்கின்றவர்களை தேசம் பார்த்துக் கொண்டுருப்பது மனிதத்திற்கு தகாத ஒன்று. ஆகவே, உயர்சாதியினருக்கு பத்து விழுக்காடு இடஒதுக்கீடு என்பதை எதிர்ப்பதும், சமூகநீதியை நிலைநாட்டுவதும் நமக்கு எதிரே இருக்கிற கடமையாகும்.

●


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/- (முழுப்பக்கம்)**

தமிழக காங்கிரஸ் தலைவராக திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர்களாக எச். வசந்தகுமார் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் கே.ஜெயக்குமார், திரு. விஷ்ணுபிரசாத், மயூரா ஜெயக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும், "நான் காங்கிரஸ் இயக்கத்தில் அரை நூற்றாண்டு காலமாக அடிமட்டத் தொண்டனாக இருக்கிறேன். எங்கள் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் என்னைக் கண்டறிந்து தமிழக காங்கிரசு கமிட்டித் தலைவராக நியமித்துள்ளார். இதற்காக தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், ப.சிதம்பரம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராசரும் மக்கள் தலைவர் ஜி.கே.மூப்பனாரும் அமர்ந்த பதவியில் அமரும் நான், அவர்களின் புகழுக்கு மகுடம் சூட்டும் விதமாக பணியாற்றுவேன். காங்கிரசின் உயர்ந்த கொள்கைகளை தூக்கிப்பிடிப்பேன். மதச்சார்பற்ற சக்திகளின் பலத்தை தமிழகத்தில் நிரூபிப்பேன். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் மதவாத சக்திகளை தோற்கடிக்க தி.மு.க. தலைமையிலான கூட்டணியுடன் இணைந்து நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற பாடுபடுவேன். தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியை அமைப்பு ரீதியாக மேம்படுத்தும் வகையில் பணியாற்றுவேன்" என்று கூறியிருக்கிறார். திரு. ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள டிவிட்டர் செய்தியில் "திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் தலைமையில் நம்பிக்கை உண்டு" என்று கூறியிருக்கிறார்.

திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் முந்தைய தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் தாலுகாவில் உள்ள கீரப்பாளையத்தில் பிறந்து வளர்ந்து பட்டம் பெற்றவர். இவரது தந்தை திரு. சம்பந்தம் ஒரு முழுமையான திராவிடக் கழகக்காரர். எனவே, மூன்று மகன்களுக்கும் முறையே திராவிட இயக்கத் தூண்களான பன்னீர்செல்வம், சௌந்தரபாண்டியன், அழகிரி என்று பெயர் வைத்தார். கிராம கர்ணமாக அப்பா இருந்ததால் ஊரில் இவர்களது குடும்பத்திற்கு




# காங்கிரசின் உயர்ந்த கொள்கைகளை தூக்கிப்பிடிப்பேன்

## தமிழக காங்கிரஸ் புதிய தலைவர் கே.எஸ்.அழகிரி

நல்ல மரியாதை இருந்தது. பெரியார் உட்பட திராவிட இயக்கத்தவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தால் தவறாமல் இவர்களது இல்லத்திற்குச் செல்வார்கள். திரு. சம்பந்தம் அவர்கள் நல்ல பேச்சாளர். "எனது தந்தை, அவரின் கருத்தை எங்கள் மேல் சிறிதும் திணித்தது இல்லை. எங்களுக்கு முழு கருத்துச் சுதந்திரம் கொடுத்தார். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும்போதே காங்கிரஸ் மேடைகளில் நான் பேசத் துவங்கிவிட்டேன்" என்கிறார் திரு. அழகிரி. இவரது சகோதரர் திரு. பன்னீர்செல்வம் கூட்டுறவுத்துறையில் இணைப் பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் ஓய்வு நேரங்களில் ஜெயகாந்தன், ஓசோ ஆகியோரின் புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் கொண்டவர். குடும்பப் பின்னணி மூலமாக பாரதிதாசனுடன் பழக்கம் ஏற்பட்டது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்று கூறும் திரு. கே. எஸ். அழகிரி அவர்கள், தமிழின் மேலும் கட்சியின் மேலும் குடும்பத்தின்மேலும் மிகுந்த பற்றுக் கொண்டவர்.

கீரப்பாளையம் ஒன்றியத்தின் பெருந்தலைவர் பொறுப்பில் சிறப்பாக பணியாற்றியவர். 1991ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று தொகுதி மக்களுக்காகப் பணியாற்றியவர். இதே தொகுதியில் 1996ஆம் ஆண்டும் வெற்றி பெற்றார். 2009ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், கடலூர் நாடாளுமன்றத் தொகுதியில் களம் கண்டு வெற்றி பெற்று டெல்லி சென்றார்.

திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் அரசியல் பண்பாளர், அறிவார்ந்த சிந்தனையாளர், அரசியல் தொடர்பான கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளர். ஆழமான கருத்துகளை அழகுமிகு தமிழிலும் ஆங்கிலத்திலும் சிந்தாமல், சிதறாமல் பேசும் ஆற்றல் பெற்றவர். தமது அரசியல் வாழ்வில் ஆறுமுறை சிறைக்குப் போயிருக்கிறார். பரோலில் வெளிவரும் கைதிகளுக்கு பரோலை நீட்டிக்க, சட்ட அமைச்சராக இருந்த கே.ஏ.கிருஷ்ணசாமியின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்..

திரு. கே. எஸ். அழகிரி அவர்கள் கீரப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவராக பணிசெய்த போது 'அன்னை இந்திரா மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கம்' என்ற ஒரு அமைப்பைத் தொடங்கி,ஆயிரம் கிராமப்புறப் பெண்களுக்கு இந்தியன் வங்கி மூலம் கடனுதவி பெற்று, தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்ததோடு, திரு. மூப்பனார் அவர்களின் பேச்சை சவாலாகக் கொண்டு எல்லோரிடமும் பணம் வசூல் செய்து வங்கிக் கடனையும் அடைத்தார் என்பது வரலாறு.

"எனக்கு சிறு வயது முதலே பொதுவுடைமைத் தத்துவங்கள் பிடிக்கும். நமது நாட்டில் சமத்துவ சோசலிச சமுதாயம் அமைய வேண்டுமென்றால் காங்கிரசின் உயரிய கருத்துக்கள், கொள்கைகள் மூலமே சாத்தியமாகும் என்ற காங்கிரசில் இணைந்தவன் நான்" என்று பெருமையுடன் எப்போதும் கூறுவார். கட்சியின் மேல் மிகுந்த பற்றுக் கொண்ட கே.எஸ்.அழகிரி அவர்கள் அக்கட்சியின் தமிழகத் தலைமைப் பொறுப்பிற்கு வந்திருப்பது கட்சினரிடையே புதிய உற்சாகத்தை தந்துள்ளது. மற்ற கட்சியினரும் பொது மக்களும் மாசற்ற தலைவரான கே. எஸ். அழகிரி அவர்கள் தலைவரானதை வரவேற்கின்றனர். ●



# போலி மருத்துவர்

வருகின்ற நோய்க்கெல்லாம் தடுப்பு ஊசி
வலியுணராப் போட்டுவிட்டு மனத்தில் மட்டும்
வருத்துகின்ற வலிகொடுத்துப் பயணத்தை வாங்கி
வாரிசுக்கும் சேர்த்திடுவார் காலம் எல்லாம்
நிறுத்திடுவார் நோயையென்று நினைத்துச் சென்றால்
நிம்மதியைக் குறைத்திடுவார் மேலும் கூறி
தருகின்ற மருந்துக்கும் தரகும் பெற்று
தன்னைமட்டும் வளர்த்திடவே தவற மாட்டார்.

நல்லவர்தான் மருத்துவரும் என்றே எண்ணி
நம்பியங்கே சென்றடைந்தால் காணும் காட்சி
தில்லுமுல்லாய் காரியங்கள் செய்தே நம்மை
திகைப்பினிலே ஆழ்த்திவிடும் அவர்தம் செய்கை
கொல்லுகின்ற ஊசிதனை உடலில் ஏற்றி
கொடியநோயே தொற்றியதாய் பொய்யு ரைத்து
இல்லாத கல்லூரியில் சான்றும் பெற்றே
இவர் செய்த மருத்துவமே போலி யாகும்

அந்தநிலை புரியாத ஏழை மக்கள்
அவரேதான் தெய்வமென்று நம்பிக் கொண்டு
சொந்தநிலம் வீடுமனை விற்று விட்டு
சுகம்பெறுவோம் என்றதொரு நினைப்பினாலே
வந்துசேர்வார் அவரிடத்தில் நோயைத் தீர்க்க
வாழ்க்கையை முடித்திடுவார்! பாவம் ஏழை
எந்த ஆட்சி வந்தாலும் இவர்கள் மட்டும்
எப்போதும் பிழைத்திடுவார் ஏய்த்தவாறே!

கவிஞர் **இராமன்.** சென்னை

# நற்றவவானினும் நனிசிறந்த தமிழ்மீது ஆர்வம் கொண்டவர் திரு. பீமபெருமாள்

பெயர் : **பீம. பெருமாள்**

பிறந்த நாள் : 09 - 10 - 1940

பிறந்த ஊர் : வரதாபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்

தாய், தந்தையர் : அதிரூபம் அம்மையார் பீமப் பிள்ளை

**கல்வித் தகுதி :** புதுமுக வகுப்பு வரை, சென்னை பச்சையப்பன் கல்லூரி (1959-60) பட்டப்படிப்பு குடும்பச் சூழ்நிலையினால் தடைபட்டது (அத்தானின் வியாபாரத்திற்க உறுதுணையாய் நிற்க வேண்டிய நிலை)

**துணைவியார் :** மதுரம் அம்மையார், அத்தானின் மூத்தமகள். முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். இவர்களது குடும்பத்தில் முதல் சுயமரியாதைத் திருமணம் இதுவே ஆகும்.

**குடும்ப உறுப்பினர்கள் :** ஒரு மகன், இளங்கலை (ஆங்கிலம்), ஒரு மகள் பள்ளி இறுதியாண்டுவரை. (திருமணமாகி இப்போது மூன்று மகள்கள் அவருக்கு)

**அரசுப்பணி :**சென்னை மாநகராட்சியில் பல்வேறு துறைகளில் பணியாற்றி மேலாளராக ஒய்வு பெற்றவர். மொத்தம் 35 ஆண்டுகளும் சில மாதங்களும்.

**குடும்பப் பின்னணி:** அத்தான் அமரர் எம்.ஆர். கண்ணன் (முன்னாள் மாநகராட்சி மன்ற உறுப்பினர் 1959-1962 வரை) தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் 1967 முதல் 1976 வரை (இரண்டு முறை). அத்தான் அவர்களின் குடும்பத்திலேயே சிறுவயது முதல் தொடர்ந்து இருந்து வந்ததால் சுயமரியாதைச் சிந்தனைகள் திரு. பெருமாள் அவர்களை ஈர்த்தன.

தமிழ் அமைப்புகளோடு தொடர்பு : அ) சென்னை ஒய்எம்சிஏ பட்டிமன்றம், எசபிளனேடு கிளையில் கடந்த 12 ஆண்டுகள் தொடர்பு, இலக்கியக் கூட்டங் களில் கலந்து கொண்டு அறிஞர் பெருமக்கள் ஆற்றும் உரையை செவிமடுத்தல், 2018 ஆம் ஆண்டு முதல் ஒய்எம்சிஏவின் வாழ்நாள் உறுப்பினர்.

ஆ) அண்ணா நகர்த் தமிழ்ச்சங்கம் செயற்குழு உறுப்பினராகத் தொடர்ந்து இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டது.

**தமிழ் ஆர்வலர் :** நல்ல நூல்களை வாங்கி, வாசிப்பது, அவற்றை நேசிப்பது, சுவாசிப்பதுமாக வாழ்ந்து வருவது. 75ஆம் அகவையின்போது ரூபாய் 4155 மதிப்புள்ள 45 நூல்களை அரும்பாக்கம், சிற்றரசு வீதியில் உள்ள மாவட்ட கிளை நூலகத்திற்கு இலவசமாக அளித்துள்ளார்.


இலக்கியம், வரலாறு, திராவிட இயக்கச் சிந்தனை போன்ற பல்வேறு கூறுகளில் ஈடுபாட்டுடன் செயல் பட்டு வருகிறார். தற்சமயம், ‘மீண்டும் கவிக்கொண்டல்’ இலக்கிய இதழின் புரவலர், ‘தமிழ்ப்பணி’ இதழின் புரவலர், ‘முகம்’, ‘அறிவின்வழி’ சிற்றிதழ்களின் சந்தா தாரர் ஆக இருந்து வருகிறார்.

மீண்டும் கவிக்கொண்டல் ஆகஸ்டு 2015இல் இவருடைய நிழற்படத்தை முகப்பு அட்டையில் அச்சிட்டு, வாழ்க்கைக் குறிப்பையும் வெளியிட்டதோடு, தமிழுக்குத் தொண்டு செய்வதில் ஆர்வம் உள்ளதைக் கருத்தில் கொண்டு ‘தொண்டறச் செம்மல்’ என்ற சிறப்புப்பட்டம் வழங்கி பெருமைப்படுத்தியுள்ளார் ஆசிரியர் கலைமாமணி மா. செங்குட்டுவன் அவர்கள்.

கவிதை வட்டப் புரவலர் என்ற வகையில், கவிதை வட்டச் செயலாளர் புலவர் இளஞ்சேரல், எம்.ஏ., அவர்கள் 13-09-2015 அன்று நடைபெற்ற 435 ஆம் கவிதை வட்ட நிகழ்ச்சியின்போது பாராட்டி அருமையாக கவிதை மழை பெய்துள்ளார்.

**கட்டுரைகள் வரைதல் :** கடந்த ஓராண்டாக இவர் வரைந்த கட்டுரைகள் சில சிற்றிதழ்களில் வெளிவந்துள்ளன. குறிப்பாக, முகம், உகரம், மீண்டும் கவிக்கொண்டல், தமிழ்ப்பணி போன்ற இலக்கிய இதழ் களாகும். அண்மைக்காலமாக அதாவது ஜூலை 2018, ஆகஸ்டு 2018, செப்டம்பர் 2018 ஆகிய மாதங்களின் ‘முற்றம்’ பல்சுவை இதழிலும் இவரின் கட்டுரைகள் சில வெளியிடப்பட்டுள்ளன.

**வி.ஜே.ஜார்ஜ்.**
*அமைந்தகரை, சென்னை.*




# "நாங்கள் ஏன் தமிழ் கற்கிறோம்?"

## விடையளிக்கும் ஃபேஸ்புக்கில் வைரலான சீனர்கள்

கடந்த சில மாதங்களாக சீனாவை சேர்ந்த சிலர் வகுப்பறையில் தமிழை பேசுவது, படிப்பது, எழுதுவது, நாடகத்தில் நடிப்பது, தமிழர்களின் பாரம்பரிய உடைகளை உடுத்திக் கொண்டு பொங்கல் கொண்டாடுவது போன்ற காணொலிகளும், புகைப்படங்களும் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

இவற்றை பார்க்கும் இணைய பயன்பாட்டாளர்களுக்கு ஆச்சர்யம் மட்டுமின்றி, அவர்களது பின்னணி குறித்த பல்வேறு கேள்விகளும் எழுகின்றன.

எனவே, இந்த காணொலி / புகைப்படங்களை வெளியிட்டு வரும் சீனாவின் யுன்னான் மின்சு பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் தமிழ் துறையை தொடர்பு கொண்டு பிபிசி தமிழ் பேசியது.

**"சீன அரசு தமிழை ஊக்குவிக்கிறது"**

சீனாவிலுள்ள யுனான் மாநிலத்திலுள்ள யுனான் மின்சு பல்கலைக்கழகத்தின் தெற்காசிய மொழிகள் மற்றும் கலாச்சார கல்லூரியில் வங்காளம், நேபாளி, சிங்களம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளுக்கான துறைகள் தனித்தனியே செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், அங்கு 2017ஆம் ஆண்டு தமிழ்த்துறை அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டு, கடந்தாண்டு மார்ச் முதல் படங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

யுனான் மின்சு பல்கலைக்கழக தமிழ் துறையின் செயல்பாடுகள் குறித்து, அதன் ஒருங்கிணைப்பாளரும், துணைப்பேராசிரியருமான நிறைமதியிடம் (சீனப் பெயர் கிகி ஜாங்) கேட்டபோது, "நாங்கள் தமிழ் மொழியில் நான்காண்டுகள் இளங்கலை பட்டப் படிப்பை வழங்கி வருகிறோம். தமிழ்மொழி குறித்த அறிமுகமே இல்லாத ஆறு சீன மாணவர்கள் தற்போது படித்து வருகிறார்கள்.

அவர்களுக்கு முதலாமாண்டு அடிப்படை படிப்பு, பேச்சு, எழுத்து குறித்தும், அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழர்களின் இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு உள்ளிட்ட பல்வேறு சிறப்பியல்புகளையும் சொல்லித் தருகிறோம்" என்று கூறுகிறார்.



இந்த படிப்பில் சேருவதற்கான அடிப்படை தகுதி என்ன? உதவித்தொகை ஏதாவது வழங்கப்படுகிறதா? என்ற கேட்டபோது, “இந்த படிப்பிற்கு சீனாவை சேர்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். முதற்கட்ட நுழைவுத்தேர்வுக்கு பிறகு தமிழை விருப்பப்பாடமாக தேர்ந்தெடுத்தவர்களிடம் அதற்குரிய காரணங்கள் கேட்டறிந்துவிட்டு தகுதியான மாணவர்களை தேர்வு செய்கிறோம். தமிழைப் படிக்கும் மாணவர்களையும், என்போன்ற ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் சீன அரசு குறிப்பிடத்தக்க அளவில் உதவித்தொகையும் வழங்குகிறது“ என்று நிறைமதி கூறுகிறார்.

**சீனர்கள் ஏன் தமிழ் கற்கிறார்கள்?**

சீனர்கள் தமிழ் படிப்பதற்கான காரணம் என்ன? இது சீன அரசாங்கத்தின் மறைமுக சதித்திட்டமா? தமிழைப் படித்துவிட்டு இவர்கள் என்ன செய்வார்கள்? உள்ளிட்ட சமூக ஊடக பயன்பாட்டாளர்கள் முன்வைக்கும் பல்வேறு கேள்விகளை நிறைமதியிடம் கேட்டதற்கு, “தமிழ் மொழிக்கும் சீனாவிற்கும் பல நூற்றாண்டுகளாக நெருங்கிய தொடர்பு உள்ளது. அதுமட்டுமின்றி, அன்று தொட்டு இன்று வரை வர்த்தகத்தில் சிறந்த நண்பர்களாக திகழ்ந்து வருகிறோம். இதை கலை, விளையாட்டு, கல்வி போன்ற வற்றிற்கும் விரிவுபடுத்தவதற்கு சீனா விரும்புகிறது.

அது மட்டுமின்றி, பிராந்தியத்தில் மிகப்பெரிய நாடாக விளங்கும் இந்தியாவை முழுவதுமாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அதற்கு தென்னிந்தியாவை அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டை புரிந்து கொள்வது அவசியம் என்பதால் நாங்கள் தமிழ் மொழியையும், அதன் கலாச்சாரம், இலக்கியம், கலைகள் உள்ளிட்டவைகள் குறித்து தெரிந்துகொள்வதற்கு முயற்சித்து வருவதன் ஒருபடியே இது.

எனவே, எங்களது மாணவர்கள் தமிழ் மொழியை மட்டுமின்றி அதன் சிறப்பியல்புகள் குறித்து முழுவதும் தெரிந்து கொள்ளும் விதமாக அவர்களது மூன்றாமாண்டு படிப்பை முழுவதும் தமிழகத்தில் கற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கு விரைவில் தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர் மாணவர் பரிமாற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ள உள்ளோம்“ என்று விவரிக்கிறார்.

முற்றிலும் தமிழ் மொழியின் அறிமுகமே இல்லாத சீன மாணவர்கள் படிப்பை தொடங்கிய சில மாதங்களிலேயே மொழியை ஆர்வத்துடன் கற்று கொண்டதுடன், தங்களது எண்ணங்களை அழகான கையெழுத்தில் தமிழிலேயே எழுதுவதாக தெரிவித்து இந்த துறையின் சார்பில் வெளியிடப்பட்ட புகைப் படங்களும், காணொலிகளும் சமூக ஊடகங்களில் பரவலான பாராட்டைப் பெறுவதைப் பார்க்க முடிகிறது.

இது குறித்து, அங்கு பயிலும் மாணவர் மகிழனிடம் கேட்டபோது, “முதலில் தமிழை புரிந்துகொள்வது மிகவும் கடினமாக இருந்தது. குறிப்பாக தமிழ் மொழியில் 247 எழுத்துகள் உள்ளதை கண்டு மிகவும் பயந்துவிட்டேன். ஆனால், தமிழை தொடர்ந்து படித்துப் படித்து அதனால் ஈர்க்கப்பட்டு விட்டேன். பொங்கல் விழா கொண்டாடுதல் தமிழ் உணவு சாப்பிடுதல், தமிழ் திரைப்படங்களை ரசித்தல், முதலியவற்றின் மூலம் தமிழர்களின் கலாச்சாரத்தை புரிந்து கொள்வதற்கும், தமிழ் மொழியை மேலும் ஆர்வமாகவும் ஆழமாகவும் கற்றுக்கொள்வதற்கும் உதவுகிறது“ என்று அவர் கூறுகிறார்.

“தமிழ் மிகவும் அழகாக இருக்கிறது, தமிழ் மொழியை கற்றுக்கொள்வது கடினமாக இருந்தாலும், அதை ஈடுபாட்டுடன் கற்றுக்கொண்டு, தமிழர்களுடன்

*செம்மையாக உரையாடல் நடத்த விரும்புகிறேன்" என்று கூறுகிறார் கயல்விழி என்னும் மாணவி.*

*தமிழ் மொழியின் சிறப்பியல்புகள், தமிழர்களின் வரலாறு, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றை யெல்லாம் தவிர்த்து தமிழை படிப்பதால் சீனர்களுக்கு பிரகாசமான வேலைவாய்ப்பு உள்ளதாக உறுதிபட கூறுகிறார் நிறைமதி.*

*"எங்களிடம் நான்காண்டு பட்டப்படிப்பை முடிக்கும் மாணவர் களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. உதாரணமாக, சென்னையில் பல்வேறு சீன நிறுவனங்களின் கிளை களும், தொழிற்சாலைகளும், துணை நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் உயரதிகாரிகளாக உள்ள சீனர்களுக்கு மாண்டரின், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளே தெரிந்துள்ளதால் மற்ற பணியாளர் களுடன் இயல்பாக உரையாடுவது கடினமாக உள்ளது.*

*இந்நிலையில், மாண்டரின், ஆங்கிலம் மட்டுமின்றி தமிழும் தெரிந்த சீனர் ஒருவர் இருந்தால் எப்படி இருக்கும் என்ற இடை வெளியை பூர்த்தி செய்யும் வகையில் எங்களது முயற்சி இருக்கும். அதுமட்டு மின்றி, பொதுவாகவே தமிழ் திரைப்படங்களை ஆர்வத்துடன் பார்க்கும் சீனர்களுக்கு பெருந்தடையாக இருந்து வரும் மொழிபெயர்ப்பை மேற்கொள்வதிலும் பணிவாய்ப்புகள் உள்ளன. தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து படித்து, அதில் ஆராய்ச்சி செய்வ தற்கும், எதிர் கால சீனர்களுக்கு தமிழ் மொழியை கொண்டு செல் லும் ஆசிரியராகவும் பணிபுரிவதற்கு வாய்ப்புள்ளது என்று நிறைமதி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.*

*"நான் பட்டம் பெற்ற பிறகு தமிழ்நாட்டிற்கு சென்று மேலதிக கற்றல்களையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு, ஒரு தேர்ந்த தமிழ் ஆசிரியராக விரும்பு கிறேன்" என்று கயல்விழி கூறுகிறார்.*

*மாணவன் மகிழன் பேசும்போது, "நான் தமிழ்நாட்டில் சில காலம் வாழ்ந்து அங்குள்ள கலாச்சாரத்தில் முழுமையாக மூழ்க விரும்பு கிறேன். வாழ்நாள் முழுவதும் தமிழ் சார்ந்த பணிகளை மேற்கொள் வதுடன், சீனஇந்திய நட்புக்கு ஒரு பாலமாக மாற வேண்டுமென விரும்புகிறேன்" என்று தனது கனவை முழுவதும் தமிழிலேயே விவரிக்கிறார்.*

*சீனா உள்ளிட்ட வெளிநாட்டை சேர்ந்தவர்கள் தமிழ் மொழியை கற்பதையும், அமெரிக்கா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படுவதையும் பார்த்து தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்தாலும் தமிழ்நாட்டில் தமிழின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது.*

*அதாவது, சமீபத்திய ஆண்டுகளாக பள்ளிக்கல்வி முதல் பல்கலைக்கழக படிப்புவரை ஆங்கில வழி கல்வியின் தாக்கமே தமிழ் நாட்டில் அதிகரித்து காணப்படுகிறது. இது குறித்து நிறைமதியிடம் கேட்டபோது, "தமிழர்கள் தங்களது தாய்மொழியின் மீது அதிக பாசம் கொண்டவர்கள் என்பதை நான் நன்கறிவேன். தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் ஆங்கில மொழி மீதான மோகத்துக்கு உலகமய மாக்கலே மிக முக்கிய காரணம். இதுபோன்ற தடைக்கற்களை சீன மொழியும் சந்தித்து மீண்டெழுந்து வருகிறது. இருந்தபோதிலும், உலகின் செம்மொழிகளில் முக்கிய மொழியான தமிழை தமிழர்கள் பேணிக்காக்க வேண்டும். தமிழின் அறிமுகமே இல்லாத சீனர்களே தமிழை கற்க முன் வரும் நிலையில், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தங்களது குழந்தைகளை தமிழ் வழியில் படிக்க வைத்து அடுத் தடுத்த தலைமுறைகளுக்கு தமிழ் மொழியை கொண்டு செல்ல வேண்டும் என்று நிறைமதி நிறைவு செய்கிறார்.*

***நன்றி : பி.பி.சி.***

# பரிவு தேவைதான்

அங்கே ஆடு மாடு
மேய்க்கச் சொன்னால்
கௌரவக் குறைச்சல்
என்று நெனக்கிறான்

இங்கே காலையும் மாலையும்
நாய் மேய்க்கிறான்
ஏசி ரூம்ல பெட்டுபோட்டு
பக்கத்துல படுக்க வைக்கிறான்

நாய்க்கு இடம் போதலன்னு
தரையில படுக்கிறான்
பெத்த தாய்க்கு சுகம் இல்லன்னா
தர்ம ஆஸ்பத்திரிக்கு விரட்டுறான்

நாய்க்கு சுகம் இல்லன்னா
ஆயிரமாயிரம் செலவு செய்யிறான்
வெளிநாடு போகணும்னா
நாயையும் விமானத்துல ஏத்துறான்
பெத்த தாயை ஒரு போன் காலுக்கு
ஏங்க வைக்கிறான்

அன்று நாயை மனிதன் தன்
காவலுக்கு வைத்தான்
இன்று நாய்க்கு அவனே
காவலாக மாறிப்போனான்

ஏன் இந்த மாற்றம்?
எதை நோக்கிப் போகிறது தேசம்

நாயிடம் பரிவு தேவைதான்
மற்ற உயிர்கள் மீது
பரிவு தேவையில்லையா?
தாய்க்கு அடுத்து
பால் கொடுத்த பசு எங்கே
விவசாயிக்கு தோள் கொடுத்த
காளைகள் எங்கே?
பாலும் உணவும்
மனிதனுக்குத் தேவைதானே
இதை அறிந்தால்
நமக்கு நன்மைதானே!

**வாணியம்பாடி தியாகராஜன்.**
9962082032.

# எதிலும் “பெர்ஃபெக்சனிஸ்ட்டா நீங்கள்? மன அழுத்தம் ஏற்படுமாம் எச்சரிக்கை!




உடல்நலம், மனநலம் என்பது இரண்டு எருதுகள் பூட்டிய வண்டி போன்றது. இரண்டும் இணைத்து ஒன்றாகப் பயணிக்க வேண்டும். ஒன்று சரியாக இல்லையென்றால் கூட வாழ்க்கை எனும் வண்டி சரியாக ஓடாது. ஆனால் உடல்நலத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மனநலத்துக்குக் கொடுக்க பலர் தவறுகிறோம். மனநல ஆரோக்கியம் என்பது குழந் தைகள், வளரிளம் பருவம், இளைஞர்கள், முதியோர் என அனைத்து வயதினருக்கும் அவசியமானது. மனது உற்சாகமாக இருந்தால்தான் உடலும் ஆரோக்கியமாக இருக்கும், மனநலத்தை மேம்படுத்துவதற்கான ஐந்து வழிமுறைகளை ஃபோர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது.

1. உங்களையே நேசியுங்கள்  கிடைத்த வாழ்க்கையை சந்தோஷமாக வாழாமல், உங்களிடம் நீங்களே கடுமை யாக நடந்து கொள்ளாதீர்கள். மனதளவில் சோர் வடையும் போது நீங்கள் வெற்றி கண்ட தருணங் களையும் உங்களிடம் அன்பாகவும் ஆதரவாகவும் இருப்பவர் களையும் நினைத்துப் பாருங்கள். எல்லாரும் தவறுகளில் இருந்துதான் கற்றுக்கொள்கிறார்கள். அதனால் அனைத்திலும் பெர்ஃபெக்ஷனிஸ்ட்டாக இருக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். அப்படி நினைத்துச் செயல்பட்டால் மன அழுத்தம் ஏற்பட்டு மற்ற வேலைகளையும் அது பாதித்துவிடும். இதனால் மனச்சோர்வு, அதிக அளவில் உணவு எடுத்துக்கொள் ளுதல் பிரச்சனை ஏற்படும். இதற்குத் தீர்வாக நிஜங்களை ஏற்றுக்கொள்ளுதல் பிரச்சனை ஏற்படும். இதற்குத் தீர்வாக நிஜங்களை ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். அடையக்கூடிய இலக்கு களை மட்டும் நிர்ணயித்துக் கொள்ளுங்கள். எத்தனை பிரச்சனைகள், பணிச் சுமைகள் இருந்தாலும் உங்களுக்கென்று தனிப்பட்ட நேரத்தை ஒதுக்குங்கள். சிறிய விடுப்பு எடுத்துக் கொண்டு உங்களுக்குப் பிடித்தமான செயல்களில் ஈடுபடுங்கள். மனரீதியாகவும், உணர்வுபூர்வமாகவும் உங்களைப் பாதிக்கும் நபர்களை விட்டுச் சற்று தள்ளியே இருங்கள்.

2. தியானம்  தினமும் தியானம் செய்வதால் மன திற்கும், உடலுக்கும் பல நன்மைகள் கிடைக்கும். தியானம் செய்வது மன அழுத்தத்தைப் போக்குவ தோடு கவனத்தை ஒருங்கிணைத்தல், நல்ல மனநிலை, நினைவாற்றலை அதிகரித்தல் மற்றும் நல்ல தூக்கம் ஆகியவற்றை அளிக்கிறது. விடுமுறை எடுத்துக் கொண்டு பயணம் செய்வதால் கிடைக்கும் உற்சா கத்தை தினமும் 10 நிமிடங்கள் தியானம் செய்வதன் மூலம் எளிதாகப் பெற முடியும். மனதை ஒருநிலைப் படுத்துவது, நடந்துகொண்டே செய்யும் தியானம் செய்தல், ஆழ்நிலை தியானம் எனப் பலவகையான தியானங்கள் உள்ளன. அதில் நமக்குப் பொருத்தமான வற்றைத் தேர்ந்தெடுத்து தியானம் செய்யலாம்.

3. இயற்கையோடு இணையுங்கள்  நீண்ட நடை பயணம், அருவியில் குளிப்பது என்று இயற்கையோடு ஒன்றிய செயல்களில் ஈடுபடுவது மனநலத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு பெரிதும் உதவும். இயற்கையோடு ஒன்றி இருப்பது மனஅழுத்தம், பதற்றம் ஆகியவற்றைக் குறைத்து, உற்காச மன நிலையை அளித்து, சுய மரியாதையையும் மேம்படுத்து கிறோம். மேலும் படைப்பாற்றலை அதிகரித்து, நினை வாற்றலையும் பெருக்குகிறது. தோட்ட வேலைகளில் ஈடுபடுவது, அறைகளில் உடற்பயிற்சி செய்யாமல் வெளிப்புறக் காற்றை சுவாசித்தவாறே உடற்பயிற்சி செய்வதும் இறுக்கத்தைத் தளர்த்தி, மன அழுத்தத் துக்குக் காரணமாக கார்டிசோல் எனும் ஹார்மோன் சுரப்பைக் குறைக்கும் என்கின்றன ஆய்வுகள்.



*4. முன்னுரிமைகளை நிர்ணயுங்கள் இந்த ஆண்டு உங்கள் தொழில் சார்ந்து என்ன இலக்குகளை அடைய வேண்டும் என்பதையும், தனிப்பட்ட வாழ்க்கையில் என்னென்ன இலக்குகளை அடைய வேண்டும் என்பதையும் பட்டியலிடுங்கள். அதன்பிறகு அந்த இலக்குகளில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று வரிசைப்படுத்துங்கள். இது உங்கள் ஆற்றலையும் நேரத்தையும் சாதுரியமாகப் பயன்படுத்த உதவும். இதுபோன்ற திட்டமிடல் ஊக்கத்தை அளித்து, கவனத்தைக் கூர்மையாக்கி நிர்ணயித்த இலக்குகளை எளிதில் அடைய உதவும். ஆனால் உங்கள் தகுதிக்கு மீறிய இலக்குகளை நிர்ணயிப்பதைத் தவிர்க்க வேண்டும். அது மனதளவில் உங்கள் செயல்பாடுகளை முடக்கிவிடும்.*

*5. போதுமான தூக்கம் தூக்கமும் மனநலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. போதுமான தூக்கம் நல்ல மனநிலை, நினைவாற்றல், அதிக உற்பத் தித்திறன், படைப்பாற்றல் திறன் ஆகியவற்றை அளிக்கும். ஒருவர் தினமும் இரவு 7 முதல் 8 மணி நேரம் தூங்குவது உடல்நலத்துக்கு மனநலத்துக்கும் நல்லது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். போதுமான தூக்கம் இல்லாதவர்களுக்கு பதற்றம், மனச்சோர்வு, உடல் பருமன் போன்ற பிரச்சனைகள் ஏற்படும், மேலும் இதயநோய், மன அழுத்தம் வருவ தற்கான வாய்ப்பும் அதிகமாகும். குறைவான தூக்கம் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தையும் பலவீன மாக்கும். நன்றாகத் தூங்குவதற்கு ஆரோக்கியமான உணவுப்பழக்கம், தினமும் 30 நிமிடங்கள் உடற் பயிற்சியும் அவசியம்.*

**டிக்சன்**

**இன்னொரு சாக்ரட்டீஸ்**

ராம்ராஜ் வேட்டி
வெள்ளை சட்டையில்
பழகிய நண்பர்கள்
பண்பாளனென்றார்கள்

மனதில் நினைத்ததை
எழுத்தில் சொன்னேன்
வாசித்த வாசகர்கள்
கவிஞனென்றார்கள்

எதுகை மோனையோடு
மேடையில் பேசினேன்
கேட்ட நண்பர்கள்
பேச்சாளனென்றார்கள்

நிலவு–இரவு–சூரியன்
சூரியன்–பகல்–நிலவு
சங்ககால பெயரென்றேன்
இலக்கியவாதியென்றார்கள்

பெருமையை கர்வத்தோடு
மனைவியிடம் சொன்னேன்
பிழைக்கத் தெரியாத
துப்புக்கெட்ட மனுஷனென்றாள்

ஊரார் புகழ்வதெல்லாம்
வீட்டிலே செல்லாக்காசு
ஒருவேளை நானும்
நாளைய சாக்ரடீஸோ?

**சா ‘தீ ’ யப் பெருமை**

என் சாதியப் பெண்ணை
மாற்றான் மகன் காதலிப்பதா?
வெகுண்டெழுந்த சிங்கமே,
சூளுரைத்த சாதியக் காவலரே
அவர்களும் ஆறறிவாளர்களே
இரத்தமும் ஒரேநிறமே!
வாழவிடு.

மருத்துவ அவசரச் சிகிச்சையில்
இரத்தம் தேவையெனில்
சொல்லாதே உடன் சம்மதம்
அடம்பிடி

உன்கிட்னி பழுதானால்
வேறெவன் கிட்னியும் ஏற்பில்லை
என் சாதி கிட்னியே மாற்றென
பிடிவாதம் பிடி

சொந்த சாதி மகிமையும்
மாற்றுச் சாதி பெருமையும்
தெரியும் அப்போ.

கவிஞர். **இளந்தேவன்**
திருச்சி.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் வழக்கு, (24.1.2019) உச்சநீதிமன்ற நீதிபதிகள் நாரிமன், நவீன் சின்கா அமர்வில் விசாரணைக்கு வந்தது.

முற்பகல் 12 மணி அளவில் வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் வழக்கை ஏற்க முடியாது என்றும், ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க இன்றே ஆணை பிறப்பிக்கப் போகிறோம் என்றும், ஒருமுறைக்கு நான்கு முறை நீதிபதி நாரிமன் அழுத்தமாகச் சொன்னார்.

வைகோ, தன் தரப்பு வாதத்தை முன்வைக்க எழுந்த போது, 'உணவு இடைவேளைக்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்' என்று நீதிபதி நாரிமன் கூறினார்.

தமிழ்நாடு அரசுத் தரப்பு வழக்கறிஞர் வாதத்தை நீதிபதி ஏற்கவில்லை. அதன்பின், வைகோ முன்வைத்த வாதம்.

## ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட இருந்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், வைகோ வாதத்திற்குப் பின் வழக்கை ஒத்தி வைத்தனர்!

'ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க உத்தரவு பிறப்பிக்கப் போகிறோம்' என இன்று காலையில் நீங்கள் அறிவித்த அறிவிப்பு, பேரிடியாகத் தலையில் விழுந்தது. தாங்க முடியாத அதிர்ச்சிக்கு ஆளானேன். இந்த ஸ்டெர்லைட் ஆலை, மராட்டிய மாநிலம் இரத்தின கிரியில் திறக்கப்பட்டபோது, விவசாயிகள் உடைத்து நொறுக்கினார்கள். மராட்டிய அரசு, லைசென்சை கேன்சல் செய்தது.



***நாரிமன்:*** அதை ஏன் இப்போது குறிப்பிடுகின்றீர்கள்?

***வைகோ:*** அப்போது ஸ்டெர்லைட் நிறுவனம் ஏன் மும்பை உயர்நீதிமன்றத்திலோ. உச்சநீதிமன்றத்திலோ ஏன் மேல் முறையீடு செய்யவில்லை? மற்ற மாநிலங்கள் உள்ளே நுழைய விடாததால், தூத்துக்குடிக்கு வந்து எங்கள் தலையில் எமனாக அமர்ந்தது. 22 ஆண்டுகளாக அதனை எதிர்த்துப் போராடி வருகின்றேன். என்னுடைய ரிட் மனு மீதுதான், சென்னை உயர்நீதிமன்றம் ஸ்டெர்லைட்டை மூட உத்தரவு பிறப்பித்தது. அதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை வழங்கியது. அதனால், ஆலை இயங்கியது.

***நாரிமன்:*** பழைய சம்பவங்களை இப்போது ஏன் சொல்கின்றீர்கள்?

***வைகோ:*** அரசியலுக்காக நான் பேசவில்லை. பத்து இலட்சம் மக்களின் குரலாகப் பேசுகின்றேன். மீனவர்கள், விவசாயிகள், வணிகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் சார்பாகப் பேசுகின்றேன்.

2013 மார்ச் 23 காலையில், ஸ்டெர்லைட் நச்சுப் புகையால் மக்கள் மயங்கி விழுந்தனர். ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. அதனை எதிர்த்து, பசுமைத் தீர்ப்பு ஆயத்தை ஸ்டெர்லைட் ஆலை நாடியது.

***நாரிமன்:*** 2013 க்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?
***வைகோ:*** பசுமைத் தீர்ப்பு ஆயம் ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவாக வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்கள் எண் 9542, எண் 9543 உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அந்த மேல் முறையீட்டையும், தற்போது இந்த நீதிமன்றத்தில் நடக்கும் வழக்குடன் சேர்த்து நடத்த வேண்டும்.

***நீதிபதி நாரிமன்:*** அதை கவனத்தில் கொள்வோம்.

வைகோ: 2018 மே 22 ஆம் தேதி, ஒரு இலட்சம் மக்கள் தாங்களாகவே அணி திரண்டு, மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுக்கப் போனார்கள். அந்த நாள் தமிழ்நாட்டின் கருப்பு நாள் ஆனது. தமிழ்நாடு அரசின் காவல்துறை, ஸ்டெர்லைட் ஆலையின் கூலிப்படையாக மாறி, 13 பேரைச் சுட்டுக்கொன்றது. பள்ளி செல்லும் மாணவி உட்பட, வயது முதிர்ந்த தாய்மார்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மக்கள் உள்ளம் எரிமலையாக வெடித்ததால், தமிழ்நாடு அரசு, கொள்கை முடிவு எடுக்காமல், கண் துடைப்பு நாடகமாக, மாசு கட்டுப்பாட்டு வாரியம், மின்சார வாரியத்தின் மூலம் ஆலையை மூடியது.

முயலோடும் சேர்ந்து ஓடிக்கொண்டே, வேட்டை நாயுடன் சேர்ந்து விரட்டும் வேலைதான் இது.

***நீதிபதி நாரிமன்:*** நீங்கள் பலத்த குரலில் பேசுகின்றீர்கள். சத்தத்தைத் குறையுங்கள்.

***வைகோ:*** நீதிபதி அவர்களே, வருந்துகிறேன். தாங்க முடியாத வேதனையில் பேசினேன். மன்னித்துக் கொள்ளுங்கள்.

***நீதிபதி நாரிமன்:*** உங்கள் கோரிக்கைதான் என்ன?

***வைகோ:*** ஆலையைத் திறக்குமாறு இன்று தீர்ப்பு அளிக்க வேண்டாம் எனக் கோருகின்றேன். செவ்வாய்க் கிழமை அமர்வில், எங்கள் தரப்பு வாதங்களை முழுமையாகக் கேளுங்கள். நீங்கள் ஜனவரி 8 ஆம் தேதியன்று இந்த உச்சநீதிமன்றத்தில், ஸ்டெர்லைட் வழக்கில் மனு தாக்கல் செய்ய, எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி. ஆனால், இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது என்று, ஸ்டெர்லைட் தரப்பில் இருந்து எனக்கு எந்தத் தகவலும் கொடுக்கப்படவில்லை. நானாகக் கேள்விப்பட்டுத்தான் வந்தேன்.

***நீதிபதி நாரிமன்:*** உங்களுக்கு முறையாகத் தகவல் அனுப்பப்படும். செவ்வாய்க்கிழமை அமர்வில் உங்கள் வாதங்களை முன்வைக்கலாம்.

***வைகோ:*** எனக்கு 40 நிமிடங்கள் தர வேண்டுகிறேன்.

***நீதிபதி நாரிமன்:*** ஆகட்டும்.

இதன்பிறகு, ஆலையைத் திறக்க இன்றே உத்தரவிட வேண்டும் என்று ஸ்டெர்லைட் தரப்பு வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை, நீதிபதி ஏற்கவில்லை. செவ்வாய்க்கிழமை அமர்வில் வாதங்களைக் கேட்கிறோம் என்றார்.

நீதிமன்றத்தில் இருந்த ஏராளமான மூத்த வழக்கறிஞர்கள், வைகோவின் கரங்களைப் பற்றி, 'இன்று நீங்கள் ஜெயித்து விட்டீர்கள். இன்று நீங்கள் இப்படி வாதாடி இருக்காவிடில், ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கும் ஆணை இன்றே வந்திருக்கும்' என்றனர்.

விசாரணையில், வைகோவுடன் வழக்கறிஞர் சிவபால முருகன், வழக்கறிஞர் ஆனந்தசெல்வம், வழக்கறிஞர் ஆசைத்தம்பி ஆகியோர் பங்கேற்றனர்.

'இந்த நாள், என் பொது வாழ்வில் நான் ஒன்றைச் சாதித்தேன் என மகிழ்வூட்டுகின்ற நாள்' என்று வைகோ செய்தியாளர்களிடம் கூறினார்.


'**தாயகம்**' *தலைமை நிலையம், சென்னை - 8*
*மறுமலர்ச்சி தி.மு.க., 24.01.2019*





# “புதுமாதிரிக் கவிதைகள்”
## புத்தகம் பற்றி நிறைவான
## ஒரு அலசல்

சென்னை மருத்துவக் கல்லூரி 1969 எம்.பி.பி.எஸ் மாணவர்கள் பொன்விழாக் கொண்டாட்டம், ஜனவரி 20 அன்று காலையில் சென்னை மருத்துவக் கல்லூரி யில் தொடங்கி, இரவு தி நகர் ஜி.ஆர்.டி. உலகத்தில் நிறைவு பெற்றது. விழாவின் முத்தாய்ப்பாக கின்னஸ் புகழ் மருத்துவர் ச. பாஸ்கரன் அவர்கள் எழுதிய இரண்டு புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

‘புதுமாதிரிக் கவிதைகள்’ புத்தகத்தை வாசித்து, மருத்துவர் பாஸ்கரன் அவர்களின் வகுப்புத் தோழர் அரூர் பிரபல குழந்தைநல மருத்துவரும் தமிழ் அறிஞருமான திரு. ஞானசேகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை :




“புதுமாதிரிக் கவிதைகள்“

புத்தகம் பற்றி நிறைவான ஒரு அலசல்

தூத்துக்குடி தந்த முத்தே!! ‘69’ குடும்பத்தின் தமிழ் சொத்தே!!

படித்திட்டேன் நினது புதுமாதிரிக் கவிதைகள் புத்தகத்தை

விருட்டென்ற ஒருமுறை ஆழ்ந்து அனுபவித்து பலமுறை.

பிறந்த ஊரின் பயணம் தொடங்கி திருநெல்வேலி, சத்தியமங்கலம், குடியாத்தம் வழியாக அழைத்து வந்திட்டாய் என்னை. நிறைவாய் நீ நின்ற இடம் சென்னை.

பயணத்தின் ஊடே நீ விளக்கிட்ட உண்மையான காட்சிகள் அனைத்தும் ஆனந்தத்தின் சாட்சிகள். துவக்கப்பள்ளி (தூத்துக்குடி) முதல் புதுமுக வகுப்பு (சென்னை லயோலா) வரை நடந்திட்ட நிகழ்ச்சிகள் ஏராளம். அடைந்திட்ட மகிழ்ச்சியோ தாராளம்.

தொடக்கப்பள்ளி படிப்பு பற்றிய பதிவு தேன்மிட் டாய் முதல் ஜவ்வு மிட்டாய் வரை.

கமர்கட் முதல் கடலை மிட்டாய் வரை அத்தனை யும் ருசித்தது. ஆடி, பாடி, விளையாடி மகிழ்ந்தது எல்லாமே சிறப்பு நினைவுகள்.

வீட்டின் முகப்புத் தொடங்கி முற்றம், அடுக்களை, புழக்கடை, அங்கு புழங்கிய பாத்திரங்கள் மற்றும் மாட்டுத் தொழுவம்,

கோழிக்கூடு பற்றி தெளிவானத் தொகுப்பு.

அன்னையின் அறநெறி, அப்பாவின் நெறிமுறை, உடன் பிறந்தவர்கள் பாசம், நட்பு, போட்டி, சேட்டைகள் மற்றும் சினுங்கல்கள் என அனைத்தும் உயிர்ப்புடன் பதிப்பு.

அடுக்களைதான் அம்மாவின் களம்.

அன்பு கலந்து அவர் சமைத்திட்ட பண்டங்கள் ஏராளம்.

வடிகஞ்சி முதல் இடி சாம்பார்வரை வெந்தயக்களி முதல் நெய்ச்சோறு, அச்சுமுறுக்கு, அதிரசம், பாயாசம், கருப்பட்டி காபி, மற்றும் கறிசோறு வரை

நீ புசித்த அத்தனையும் ருசியான நினைவுகள்.

அம்மாவின் கொருக்கு பிடித்து அலைந்ததும் பாட்டியின் இடுப்பில் அமர்ந்து மகிழ்ந்ததும் கூட்டாஞ்சோறு, நிலாச்சோறு ருசித்ததும் என உனது அனுபங்கள் அத்தனையும் சுகம்.

தாமிரபரணி ஆற்றில் ஆசைதீர நீச்சல், ஆனந்த மாய் மீன் பிடிப்பு, தூத்துக்குடி உப்பளங்கள், மணல் மேட்டில் சலிக்கும் வரை விளையாட்டுகள், குற்றால அருவியில் குளியல் அனைத்தும் மகிழ்ச்சியின் குளியல்.

பாண்டி, பல்லாங்குழி, பச்சைக்குதிரை, தாயக் கட்டம், கண்ணாமூச்சி, கள்ளன் போலீஸ் என வித விதமாய் நீ ஆடிட்ட விளையாட்டுகள் அத்தனையும் அமர்க்களம்.

மிதிவண்டி, குதிரை வண்டி மற்றும் புகை வண்டிப் பயணம், மோட்டார் வண்டியில் உல்லாச சுற்றுலா என அனைத்தும் இனிய அனுபவம்.

மணப்பாறை முறுக்கு, கடம்பூர் போளி, இருட்டுக்கடை அல்வா, கோவில்பட்டி கடலை மிட்டாய், தூத்துக்குடி இளநீர், பதநீர் என ருசித்த பண்டங்கள், மகிழ்ந்து பார்த்த திரைப்படங்கள், ரசித்த, கேட்ட இனிய பாடல்கள் அத்தனை பற்றியும் குறிப்பு. அவ்வளவும் சிறப்பு.

தூத்துக்குடி சாலையில் பண்டிதர் நேருவின் தரிசனம்

லயோலா கல்லூரி மேடையில் கவிஞரின் விமர்சனம்

இவற்றில் நீ அடைந்த பெருமிதம் அற்புதம்

இத்தனை நிகழ்வுகளில் மெய் மறந்து மூழ்கியிருந்த என்னை

பக்குவமாய் மீட்டெடுத்து பத்திரமாய்ச் சேர்த் திட்டாய் சென்னை.

ஆழ்மனத்தில் புதைந்திருந்த உனது உண்மை நிகழ்வுகளை

அழகு தமிழில் அருமையாய் நீ படைத்திட்ட இந்தத் தொகுப்பு நல்ல கவிதை

மட்டும் அல்ல, ஒரு சிறந்த காவியம். நியேதான் அதன் நாயகன்.

நிறைவான இந்த கவிதை காவியத்தை சிறப்பாக நீ படைத்தமைக்கு எங்கள்

அனைவர் சார்பாகவும் பதிவு செய்கிறேன், மகிழ்வையும் பாராட்டையும்.

பன்முகச் சிறப்பாளர் பாஸ்கரன் என்ற கவிஞனை தன்னகத்தே கொண்டிருப்பதால் பெருமைப்படுகிறது ‘Class of 69’

**பின்குறிப்பு :**

பதிப்பாளருக்குப் பாராட்டுகள்... அழகிய முகப்பு, தரமான காகிதம், அச்சுப்பிழையின்று இறுதி வரை அத்தனையும் சிறப்பு.

---

### டெல்டா விவசாயி

தேடி அலைந்தோம்
காவிரி வரவில்லை
கசா எனும் அரக்கன் வந்தான்
அவனின் கோரத் தாண்டவத்தில்
வீழ்த்தப்பட்டோம்
வீழ்ந்தாலும் கவலையில்லை
மாறாக எங்களின் கண்ணீர்கள்
காவிரியாக அடைக்க அணையின்றி
கலந்து விட்டோம் முக்கடலில்

●

### தவம்

நீயும் நானும் இணைந்து கொண்டோம்
அந்த ஒரு நொடிப் பொழுதில் கண்டிருப்பேன்
தவம் என்பதை

●

### மனிதன்

யாரும் மாறவில்லை இயற்கை
மனிதனாக நீ வாழ்ந்து
உன் உருவில் தெய்வமாக
வாழ்ந்திடுவாய்

●

### மௌனம்

சலனமற்ற மௌனங்கள்
பல எண்ணங்களைக் கடந்து
பேசாமல் இருப்பவளே ... பல
பேச்சு தட்டுகளை சேகரிக்கிறான்
கடைசியில் அவனே ஞானியாகின்றான்

●

### பொய்யான அழகி

உண்மையும் இல்லை
நன்னெறியும் இல்லை
உயிரில்லாத அழகியாய்
புதைக்கப் படுகிறாய்

●

கட்டுமாவடி **வை.பழனிவேல்**



# பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்ப்பற்று

பா வேந்தர் வாழ்ந்த காலச் சூழலில் வடமொழி ஆதிக்கம், வட மொழி உயர்வு, வடமொழியின் தொன்மை ஆகியன கருத்தியலாகப் பரப்பப்பட்ட சூழல் நிலவியது.

அதிகார இனம், தங்கள் இனம், மொழி பற்றிய உயர்வான கருத்துக் களைச் சமுதாயத்தில் பரவ விடுவதன் வழியாகப் பிற இனம், மொழி ஆகிய வற்றைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளும். பிற இனம், பிற மொழி ஆகியன தாழ் வானவை என்ற கருத்து தன்மொழி உயர்வைக் காட்டுவதன் வழியாகவும் தொடர்ந்து கூறுவதன் வழியாகவும் நிலை நிறுத்தப்படும். இத்தகைய சூழலில் எழும் எதிர்ப்புக்குரல் வேறு வகையான கருத்தியலைக் கட்டமைக் கிறது. எனவே இதற்கு, தமிழ் மொழி யின் தொன்மையின் சிறப்பைப் போற்று வதும் அவசியமான செயல்பாடாகிறது.

மொழியின் தொன்மையை அறிவி யல் அடிப்படை யில் விளக்குவது ஒரு நிலையாகும். ஆனால், மொழியின் தொன்மை என்பது இறைக் கோட் பாட்டோடும் உலகத் தோற்றக் கோட் பாட்டுடனும் இணைக்கப் படும் பொழுது அது கருத்தியலாகிறது. மொழியின் தொன்மையும் மொழியின் இனிமையும் ஆதிக்கச் சூழலில் பேசப் படும் பொழுது, மொழி வழியாக இன உணர்வை ஊட்டுவதன் செயல்பாடா கவே அமையும்.

இந்த நிலையில் தமிழ் மொழியின் தொன்மைத் தொடர்பான பாவேந் தரின் கருத்துக்களைக் காணலாம்..

*'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும்*

*மங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்*

*மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் தமிழ்*

*மக்களென் றேகுதித் தாடுவோம்*

*... மனித வாழ்வை*

*இனிய நற் றமிழே நீதான்*

*எழுப்பினை ...*

*நிலவே நீ முன் நடந்ததைக் கூறுவாய்! மெய்யாய்க் கூறுவாய்*

*இங்கச் செந்தமிழையும் உன்னையும் கூட்டி*

*இயற்கை அன்னை வளர்த்ததில்லையோ பாலூட்டி*

*முன்னைத் தோன்றிய மக்கள் முதன்முதல் பேசிய*

*மொழியே! மொழியே ...*

*மொழியில் உயர்ந்தது தமிழ் மொழியே பண்டு*

*முதல் நாகரிகமும் பழந்தமிழ் மக்களே!*

*ஆதி மனிதன் தமிழன்*

*ஆதி மனிதன் தமிழன்தான்*

*அவன்மொழிந்தாலும் செந்தமிழ்த்தேன்*

*சொல்லார்ந்த தமிழ் மொழிக்கும் அதனின் தோற்றம்*

*தொல் பழமை அடிமுடியைக் கண்டாரில்லை!*

என்று தமிழின் தொன்மையைக் கூறுவார்.

தமிழின் தொன்மையையும் தமிழரின் தொன்மையையும் கூறியதைப் போல் தமிழ் மொழியின் இனிமையைப் பற்றியும் பாவேந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழின் இனிமை, இன்பத்தமிழ், என்ற தலைப்புகளில் அமைந்த பாடல்களில் பாவேந்தர் தமக்குத் தமிழ் எத்தகையது என்பார். மங்கை ஒருத்தி தரும் சுகம் கூடத் தமிழுக்கு இணை இல்லை என்ற தன்னுணர்வை வெளிப்படுத்துவார். அதே போல எங்கள் தமிழ் என்ற தலைப்பில்,

*இனிமைத் தமிழ்மொழி எமது எமக்*

*கின்பந்த தரும்படி வாய்த்தநல் அமுது!*

என்று மொழியையும் இனிமையையும் பொதுமையாக்குவார்.

பாவேந்தர் தமிழ் மொழியைக் காத்தல் என்ற நிலையிலும் தம்மை முன்னிறுத்திப் பிறரிடம் அதே நிலைப்பாட்டை எதிர்நோக்குவார்.

*சலுகை போனால் போகட்டும் என்*

*அலுவல் போனால் போகட்டும்*

*தலைமுறை ஒருகோடி கண்ட என்*

*தமிழ் விடுதலை ஆகட்டும்!*

என்றும்,

*தமக்கொரு தீமை என்று நற்றமிழர்*

*எனை அழைத்திடில் தாவி*

*இமைப்பினில் ஓடித்தரக்கடவேன் நான்*

*இனிதாம் என் ஆவி!*

என்றும் மொழிக்காப்பிற்காக எதையும் இழக்கலாம் என்பார்.

தமிழ் மொழியினைக் காப்பதற்கு உயிரையும் தருவதற்கு முன்வர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாவேந்தர்!

தமிழ் என்பது தமக்கு மட்டும் உயிர் என்று அல்லாமல் தமிழர்கள் அனைவரும் அதை உயிராகப் பேண வேண்டும் என்பார். உயிர் என்ற கருத்தைப் பற்றிய பாவேந்தரின் கவிதை வெளிப்பாடுகள் பல நிலைகளில் உள்ளன.

*செந்தமிழே! உயிரே நறுந்தேனே*

*செயலினை மூச்சினை உளக்களித்தேனே!*

*... இனியன என்பேன் எனினும் தமிழை*

*என்னுயிர் என்பேன் கண்டீர்*

*... தமிழும் நானும்*

*மெய்யாய் உடலுயிர் கண்டீர்*

*... உன்னை வளர்ப்பன தமிழா! உயிரை*

*உணர்வை வளர்ப்பது தமிழே*

*தமிழுக்கு அமுதென்றுபேர் அந்தத்*

*தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்*

*தமிழ் எங்கள் உயிர் என்பதாலே வெல்லுந்*

*தரமுண்டு தமிழருக்கிப்புவி மேலே!*

*கமழும் உன்தமிழினை உயிரென ஓய்வு!*

*விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி அது*

*வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!*

*ஒரு தமிழன் தமிழர்க்கே உயிர் வாழ்கின்றான்*

*உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான்!*

தமிழின் இனிமையைக் கூறிய பாவேந்தர், தமிழை உயிராகக் கருதுவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ்மொழி வழியாக இனமீட்சி என்ற கருத்தியல் சார்ந்ததாகும். ஓர் இனத்தின் உயிர்நாடியே மொழிதான். பழம்பெருமை வாய்ந்த மொழியும், நாடும், பிறரின் ஆதிக்கச் சூழலில் இருக்கும் பொழுது மொழியை உயிர் என்ற குறியீட்டோடு பயன்படுத்தி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவார்.

இத்தகைய தமிழ் உயர்வே பிற்காலத்தில் தமிழ் மொழி மீட்சிக்கும், தமிழ் மொழி காத்தலுக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம்!

தொகுப்பு : **பீமபெருமாள்.**

பேசி 95009 30460



சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் இருக்கும், வீரபாண்டி நகர் பகுதிக்கு இன்று வேலை நிமித்தமாக செல்ல வேண்டி இருந்தது. ஒரு நிமிடம் ராஜஸ்தானுக்கு வந்து விட்டோமோ! என்று அதிர்த்து விட்டேன். எங்கு பார்த்தாலும் வடமாநில மக்கள், அங்கு இருக்கும் அனைத்து கடைகளிலும் அவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் பார்க்கும் பார்வை யில் எத்தனை திமிர், தமிழர்களை மிக ஏளனமாக பார்த்தார்கள். பிறகு அருகில் இருக்கும் சில தமிழர் களிடம் பேசினேன். அவர்கள் சொன்ன தகவல் மிக அதிர்ச்சியாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளில் மட்டும் சுமார் ஆயிரம் ராஜஸ்தான் மார்வாடிக் குடும்பங்கள் அந்தப் பகுதிக்கு குடிவந்து உள்ளனர். அங்கு இருக்கும் அனைத்து கடைகளிலும் அவர்கள் மட்டும் வியாபாரம் செய்யும்படி மாற்றிக்கொண்டனர்.

தமிழர்கள் கடை வைத்தாலும், அவர்களிடம் பிரச்சனை செய்து கடைகளை காலிசெய்யச் சொல் கின்ற னர் அல்லது நான்கு ஐந்து பேர் சேர்ந்து உங்கள் கடை அருகில் கடைபோட்டு அவர்களை காலி செய்ய வைப்பார்கள். இதற்கு அங்கு இருக்கும் சில அரசியல் தலைவர்களும் உடந்தை என்பதுதான் பெரும் கொடுமை, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் இவர்களுக்கு பயந்து வாழும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

அங்கு இருக்கும் ஆட்டோ ஓட்டுனர் ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தபோது, அவர் சொன்னது, அவர் இதே பகுதியில் பல தலைமுறையாக வசித்து வருவ தாகவும், ஆனால் இதற்கு மேல் இங்கு வசிக்க முடியாத சூழலை மார்வாடிகள் ஏற்படுத்திவிட் டார்கள் என்றும், கூடியவிரைவில் அந்த பகுதியில் தமிழர்களே வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்தார். இருபது ஆண்டுகள் கஷ்டப்பட்டு ஆட்டோ ஓட்டி உழைத்து கட்டிய வீட்டை இவர்களிடமே விற்றுவிட்டு வரவேண்டி உள்ளது என்று குரல் தழுதழுக்க கூறினார். நாம் வாழும் தெருவில் திடீரென்று ஆயிரம் இந்தி பேசும் மக்கள் குடிவந்தால், அந்த கலாச் சாரத்தை நம் மனம் ஏற்காது. குறிப்பாக தமிழ்ப் பெண்கள் அங்கு இருந்து விலகிச் செல்லுவார்கள்.

# மார்வாடி
# தேசமாகும் சேலம்

அதைப் பயன்படுத்தி அங்கு இருக்கும் வீடுகளை இவர்களிடம் மட்டும் விற்று விட்டு செல்லும் நிலை ஏற்பட்டு உள்ளது. அந்தப் பகுதியில் ஒரு சில சாலைகளில் அனைத்து வீடுகளை யும் வாங்கிவிட்டன னர். அந்தப் பகுதி பொதுச் சாலை களில் சென்றால் கூட இவர்களிடம் அனுமதி வாங்கிச் செல்லவேண்டு மாம். இவர்களின் இருப்பை தக்க வைத்து கொள்ள அங்கு ஒரு கோவிலை கட்டி விட்டார்கள். கோவிலை கேடயமாகப் பயன்படுத்தி அங்கு இருக்கும் தமிழர் களை மெல்லமெல்ல வெளியேற்றி விட்டார்கள். அந்தக் கோவில் பகுதியில் இவர்கள் அடிக்கடி ஒன்றுகூடி பஜனை, பூஜை என்ற போர்வையில், சத்தம் போடுவதால், அந்தத் தெருவில் இருக்கும் பலர் வீடுகளை விற்று விட்டு செல்லும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

அங்கு இருக்கும் ஒரு பாட்டி கூறியது....எங்கு இருந்து திடீர் என்று இத்தனை பேர் வந்தாங்கனே தெரியலப்பா, ஆனா நம்மள எல்லாம் மனுஷங்களா கூட மதிக்க மாட்டேன்றாங்க. நம்ம ஆளுங்களுக்கு வீடு கூட வாடகைக்கு குடுக்கமாட்டேன்றாங்க என்று நொந்து கொண்டார். அந்தப் பகுதியை சுற்றி பார்த்த போது தான் புரிந்தது, மார்வாடி கும்பல் மிக தந்திர மாக செயல்படுகின்றனர் என்று. அந்தப் பகுதிக்கு மீண்டும் தமிழர் குடிவரக்கூடாது என்று மிக திட்ட மிட்டு செயல்படுகின்றனர். அங்கு இருக்கும் வணிகம், இருக்கும் வீடுகள் அனைத்தும் தமிழர்களை விட்டு சென்று கொண்டு இருக்கின்றது. இதை பற்றி அந்த பகுதி எம்.பி.எம்.எல்.ஏ. என்று யாரும் மக்களிடம் பேசியது கூட கிடையாது.

அடுத்த தலைமுறையில் அந்தப் பகுதி முழுதுமாக, ஏதோ இந்தி பேசும் மக்கள் வாழும் பகுதி என்று நாம் இப்பொழுது சௌகார்பேட்டை பகுதியை நினைத்து கொண்டு இருக்கின்றோமோ, அதே மாதிரி சேலம் கூடியவிரைவில் மாறிவிடும். நமது அடுத்த தலைமுறை அங்கு எல்லாம் வாழ முடியாது என்று மிகத் தெளிவாக தெரிந்தும் அதை தடுக்க முடியாத இயலாமை தான் தன்னை கொல்லுவதாக ஒரு இளைஞர் தெரிவித்தார்.

அங்கு இன்னும் ஒருவர் சொன்ன செய்தி எனக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது சேலத்தில் "செவ்வாய் பேட்டை" என்ற பகுதி உள்ளதாகவும் அங்கு வட மாநில மக்கள் செய்யும் அதிகாரங்களுக்கு பயந்து, தெருவுக்கு தெரு ஜெயின் கோவில்களை கட்டி புதிய கலாச்சாரத்தை புகுத்தி பத்து வருடத்தில் அங்கு பல காலமாக வாழ்ந்து வந்த தெலுங்கு மக்கள், அவர்கள் நிலங்களை விற்றுவிட்டு, அவர்கள் தொழில்களை இழந்து, இன்று அவர்களின் அடுத்த தலைமுறை பிள்ளைகள் தனியார் வங்கிகளில் மார்க்கெட்டிங் வேலை மற்றும் சென்னை போன்ற நகரங்களில் வேலை தேடி வருவதாக தெரிவித்தார். தெலுங்கு மக்களின் அனைத்து தொழில்களும் இவர்கள் வசம் சென்றுவிட்டது. அங்கு வாழ்ந்த ஆயிரக்கணக்கான தெலுங்கு பேசும் மக்கள் வேறு பகுதிக்கு குடியேறி விட்டார்கள் என்று கூறினார். திராவிடம், திராவிடம் என்று முழக்கமிடும் திராவிட கட்சிகளே நீங்கள் தமிழர்களுக்கும் நல்லது செய்யவில்லை. இங்கு பல தலைமுறையாக வாழ்ந்து வரும் தெலுங்கு மக்கள் அடித்து விரட்டப்படாத குறையாக செவ்வாய்பேட் டைப் பகுதியில் அனாதையாக நிற்கும் போதும், ஏன் என்று ஒரு கட்சி கூட கேட்கவில்லை. எதனால் அந்த பகுதியை விட்டு தெலுங்கு மக்கள் வெளியேறி கொண்டு இருக்கின்றார்கள் என்று இதுவரை அவர் களிடம் கேட்டதுண்டா? அவர்கள் தலைமுறை இப்போது நடுத்தெருவில் நிற்பது உங்களுக்குத் தெரியுமா? அரசியல் தலைவர்களே வெட்கி தலை குனியுங்கள்.

சென்னை, திருத்தணி, கன்னியாகுமரி என்று தமிழர்கள் ரத்தம் சிந்தி போராடி வாங்கிய பகுதிகளை எல்லாம் மார்வாடிகளிடம் மிக சாதாரணமாக இழந்து கொண்டு இருக்கின்றோம். சென்னையில் தமிழர்களை மாதவரம் தாண்டி விரட்டி விட்டார்கள். வட சென்னை பகுதியில் தமிழர்களுக்கு வீடு கூட வாடகைக்கு கிடைப்பதில்லை அதே போல் நிலைமை சேலத்திலும் கூடிய விரைவில் ஏற்படும் சூழல் வந்து உள்ளது. சேலத்தில் அடுத்த பத்து வருடத்தில் தமிழர்கள் ஓமலூர், கொண்டலாம்பட்டி தாண்டி குடியிருக்க வேண்டிய நிலை வரலாம் என்று மக்கள் தெரிவித்தார்கள்.

"பிராமின்ஸ் ஒன்லி" என்று குறிப்பிட்ட போது, பொங்கிய திராவிடக் கட்சிகள் இன்று (ஜெயின்ஸ் ஒன்லி) என்று குறிப்பிடும் போது வாய்பொத்தி இருப்பது ஏன்? ஐம்பது வருடம் முன்னாள் கோவில் இருக்கும் பகுதியில் நாம் செல்லக்கூடாது என்பதை பெரியார் போன்ற தலைவர்கள் மாற்றினார்கள். இப்போதும், அதே நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கின்றோம். இவர்கள் கட்டும் கோவில் அருகில் தமிழர்கள் இருக்கக்கூடாது என்று நினைக்கின் றார்கள். தென் இந்தியர்கள் அவ்வளவு அருவறுப்பா னவர்களா? அப்புறம் எதற்கு தமிம்நாட்டுக்கு வருகின் றீர்கள்?

2011 மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 915 ஜெயின் மக்கள் மட்டும் தான் சேலத்தில் இருந்து உள்ளனர். வெறும் எட்டு ஆண்டுகளில் அது பல்லா யிரமாக மாறியது எப்படி?

மஹாவீர், ராஜஸ்தானி, ஜெயின்கோவில் இவை எல்லாம் சிறுபான்மை என்று சொல்லிச்சொல்லி அதை கேடயமாகப் பயன்படுத்தி மெல்ல அவர்கள் அனைத்து மாநகரத்திலும் பெருபான்மையினர் ஆக மாறிவருகின்றனர். தமிழ்நாட்டில் தமிழர்கள் வாழ முடியாத பகுதிகள் உருவாகி வருகின்றது என்பது எத்தனை பெரிய அசிங்கம். தமிழ்நாடு, கேட்பார் யாரும் இல்லாத நாடாக மாறிவிட்டது. அடுத்த தலைமுறை பற்றி எந்த அக்கறையும் யாருக்கும் இங்கு கிடையாது. இவர்கள் கோவில்களை பயன்படுத்தி வணிகத்தை வளைக்கின்றனர் என்பதை புரிந்துகொண்ட கேரள அரசாங்கம் வடமாநில மக்கள கோவில் கட்ட

வேண்டும் என்றால் குடியிருப்பு பகுதியில் கோவில் கட்ட அனுமதி தருவதில்லை. நேஷனல் ஹைவே பகுதியில் அரசாங்கம் கொடுக்கும் இடத்தில் மட்டும் இவர்கள் கோவில் கட்டமுடியும். எந்தப் பகுதியிலும் இவர்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் இவர்கள் என்ன செய்ய விரும்பினாலும் செய்யலாம். அந்த பகுதி கவுன்சில ருக்கு காசு கொடுத்தால் அனைத்திற்கும் அனுமதி கிடைக்கும். தமிழர்களை அருவெறுப்பாக நினைக்கும் வடமாநில மக்களிடம் காசு வாங்கி நம்மையே அடிமைப்படுத்தும் அரசியல்வாதிகள் இருக்கும் வரை நாம் அடிமை தான், சேட்டு வீடு, சேட்டுதெரு, அடுத்து சேட்டு ஊராக சேலம் மாறப்போகின்றது.

சேலம் மக்களின் கோரிக்கை என்னவென்றால், அரசியல் தலைவர்களே செவ்வாய்பேட்டை, வீரபாண் டிநகர், ஆலமரக்காடு, நாராயணநகர், சங்கர் நகர் கல்லாங்குத்து, தேவேந்திரபுரம், ரெட்டிபட்டி, சிவா யநகர் பகுதிகளில் தமிழ் மக்களிடம் சென்று பேசுங்கள், தமிழர்கள் எப்படி பயந்து வாழ்கின்றனர் என்று புரியும்.

அடுத்த தலைமுறை பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள் அரசியல் தலைவர்களே. அவர்கள் எதற்கு கோவில் கட்டுகின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். காசு இருக்கும் திமிரில் அவர்கள் அமைப்புகள் மூலம் நம்மை விரட்டி அடிப்படை அரசாங்கத்துக்கு தெரியப் படுத்துங்கள்.

இந்து, முஸ்லீம், கிறிஸ்டியன் என்று எந்த மதமாக இருந்தாலும் தமிழர்களாய் ஒன்றுபடுங்கள். இன்று செவ்வாய்பேட்டை மக்களுக்கு ஏற்பட்ட நிலைமை நாளை உங்களுக்கு ஏற்படும். நாம் பிரிந்து இருப்பது தான் அவர்களின் பலம். இப்போது நமக்கு தேவை ஒரே ஒரு ஒருங்கிணைப்பாளர். பூனைக்கு யார் மணி கட்டுவது என்று அனைவரும் யோசித்துக்கொண்டு இருக்கின்றோம். இவர்கள் வருகையால் நிலம் இழந்தோர், தொழில் இழந்தோர் என்று அனைவரும் ஒன்று சேரும் தருணம் இது. ஒரு குழுவாக இணைந்து அரசாங்கத்துக்கு தெரியப்படுத்துங்கள். சேலம் வர்த்தக சபை இதை முன்னெடுக்க வேண்டும். அல்லது யாராவது நம்மில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் மக்களை சமூக வலைதளங்கள் மூலம் திரட்டி வரவையுங்கள். இது கூடிய விரைவில் நடக்காமல் போனால் அடுத்த தலைமுறையினர், சேலத்தின் வணிகம், நிலம் என்று அனைத்தையும் இழந்து நிற்பார்கள்.

இந்த பதிவை படிக்கும் போது கண்டிப்பாக தமிழ் நாட்டில் தமிழர்க்கு இந்த நிலையா என்று அனைவர்க் கும் கோபம் வரும். ஆனால், யாரை குறை சொல்லு வது? அடிப்படை அறிவு இல்லாத அரசியல் தலைவர் களையா? இல்லை, இந்த கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் பணத்தை வாங்கி கொண்டு ஓட்டு போடும் மக்களையா?

*"Migration need to be stopped or else you need to migrate"* பதிவு : சேலம் விஜய் ●

**பேராசை**

உயிரும் உடலும் கொடுத்தாள்
கோயிலும் தீபமும் நாமானோம்
கட்டிய உடலை மறந்து விட்டு
சுற்றியுள்ளவரை ஆசைப்பட்டோம்
பேராசை இல்லாத பசி நியாயமானது
இது தான் இயற்கையின் விதி

●

**தற்பெருமை**

எதற்கும் வணங்காதவன்
என்னுடைய பாரத்தையே
தாங்கிக் கொள்ள
முடியாதவன்

●

**கசா**

கசா புயல் மனிதனை
பழமைக்கு மாற்றியது
மின் விளக்குகளால்
அலங்கரிக்கப்பட்ட வீடுகளெல்லாம்
மெழுகு வர்த்திகளால் ஒளிர்ந்தது
புதுமைகள் அழிந்தது
பழமைகள் திரும்பியது
இது தான் இயற்கை

●

**இயற்கை**

சிறு துளி கடலானது
என்னை கடக்க இயலாத பொழுது
தெரிந்து கொள்வாய்
நான் கடலென்பதை

●

**திரு ஓடுகள்**

பசிக்காகக் காத்திருந்த திருவோடுகள்
இன்றோ காத்துக் கிடக்கின்றன
சில்லரைக்காக கோயில்களின் வாசல்களில்

**கட்டுமாவடி வை.பழனிவேல்**

மதுரையில் பேசும்போது மோடி 3 எம் பி தொகுதிக்கு ஒரு மெடிக்கல் காலேஜ் திறப்பது தான் தனது அரசின் லட்சியம் என்கிறார்...! மேடையில் அமர்ந்திருக்கும் புன்னகை அரசி தமிழிசையோ அல்லது கோர்ட்டாவது (ராவது) புகழ் பிரபல ராஜா ஷர்மாவோ மோடியிடம் சொல்லுங்கள்

தமிழகத்தின் மொத்த மாவட்டம் 32

மொத்த மருத்துவ கல்லூரிகள் 29

இது அவர் குஜராத்தில் 15 வருடம் ஆட்சியைத்தக்கவைக்க மதகலவரம் செய்து கொண்டிருந்தபோது தமிழகத்தில் கலைஞரால் செய்து முடிக்கப்பட்டவை என்று.!



# மாசிக் கருவாடு

**டாக்டர் கே.பி.அர்ச்சுனன்,**
**தலைவர், தமிழ்நாடு பாரம்பரிய சித்த வைத்திய மகாசங்கம்**

நமது பாரம்பரிய உணவுகளில் பல்வேறுபட்ட உணவுகள் இருந்தாலும், அந்தந்த இடத்தில் உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உணவுகள் உண்டு. பொதுவாக அனைவருக்கும் ஏற்ற உணவுகள் வரை யறுக்கப்பட்டதாகும். அவற்றின் அறுசுவையை இலக்கணப்படுத்தி, அதிலே சித்த மருத்துவ முறைப்படி உணவுகள் வகுக்கப்பட்டது. இப்படி வகுக்கப்பட்ட உணவுகள் கீரையில் ஆரம்பித்து மீன்கள் வரை அடங் கும். நாம் உணவுகளை எப்படி சமைக்க வேண்டும், உண்ண வேண்டும், எவ்வாறு உண்டால் என்னென்ன பலன் கிடைக்கும் என்பதை நம் முன்னோர்கள் வகுத்து, தொகுத்து அதற்கு சமையல் கலை என்கிற பெயர் சூட்டி, அதனை கல்வெட்டுகளிலும், ஓலைச் சுவடிகளிலும் நாய்த் தோல்களிலும் மரப்பட்டை களிலும் பொறித்து வைத்தனர்.

இப்படி வகுக்கப்பட்டதில் அன்றாட உணவுகள் கூழ், களி, மற்றும் நீராகாரம் என்பது தற்போது மறைந்துவிட்டது. இந்த நீராகாரம் என்பது நிசித் தண்ணீர் என்றும் அழைக்கப்பட்டது. நிசி என்றால் பிராணன், தூக்கத்தில் உண்டாகும் பிராணன் ஆகும். இரவு அரிசி சாதத்தை ஆற வைத்து, சுடுதண்ணீரை நன்கு கொதிக்க வைத்து, அந்த கொதிக்க வைத்த தண்ணீரை ஆற வைத்து வடிகட்டி, ஒரு பாத்திரத்தில் கால் பகுதி சாதமும் கால்பகுதி சுட வைத்து ஆற வைத்த தண்ணீரும் ஊற்றி, அரைப்பகுதி வெற்றிடமாக விட்டு, பாத்திரத்துக்கு மேலே மூடி விடுவார்கள். இரவு முழுவதும் அதை அப்படியே விட்டு, அதிகாலையில் அந்தத் தண்ணீரை வடித்து, அதில் சிறிதளவு உப்பு போட்டு, கலக்கி குடிக்க வேண்டும். இது மனிதனின் 5 குடல்களையும் சரி செய்து, பசியை உண்டாக்கும். அப்படி உண்டாக்கிய பிறகு, நமக்குத் தேவையான எந்தவித உணவையும் உண்ணலாம். அப்படி பசி உண்டாக்கும். இந்தத் தண்ணிர் முழு ஆராக்கியத் தைத் தரும். சீரண மண்டலத்தை சீர் செய்யும். நமது உடலில் 7 விதமான தாதுக்கள் உள்ளது. இந்த 7 வித தாதுக்களில் ஒவ்வொரு தாதுவில் ஒவ்வொரு உணவாக சாப்பிடும் வகையில் உருவாக்கப்பட்டது தான் அறுசுவை உணவு.

இந்த அறுசுவை என்பது உப்பு, புளிப்பு, காரம், இனிப்பு, கசப்பு, துவர்ப்பு ஆகியவை. இவற்றை நாம் உணவாக உண்ணும் போது அதை ஒரே மாதிரியாக தயாரித்து உண்ணாமல், பலவிதமாக தயாரித்து

உண்ணுகிறோம். கறி வகைகள், மீன் வகைகள், உணவில் சேர்த்துக் கொள்வது மேலும் உடலில் எலும்பு, நரம்பு, தசை, கொழுப்பு போன்றவைகளை ஈடுகட்டத்தான். நமது பாரம்பரியத்தில் அந்தந்த இடத்துக்கு ஏற்ப குளத்தில், ஏரியில் ஆற்றில் உள்ள மீன்களை உண்கிறோம்.

அதேபோல் இந்த மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் பட்சத்தில் அதில் உப்பினைக் கலந்து கருவாடாக்கி பல காலம் வைத்து உண்கிறோம். அப்படிப்பட்ட உணவில் இந்த மாசி மீன் மிக, மிக முக்கியமான மீன்வகை ஆகும். இதற்கு உப்பினைச் சேர்க்காமல் காய வைப்பது ஆகும். அதை கருவாடாக ஆக்கி வைத்தால் அது புளியங்கொட்டைபோல் இருக்கும். இந்த மாசி கருவாடு உண்பதால் நமது உடலில் சப்த தாதுக்களும் உண்டாகும். நமது பாரம்பரியமான இந்த மாசிக் கருவாட்டை எடுத்து இடித்து, உலர்த்தி, அதில் லேசாக எண்ணெய் அல்லது நெய் கொண்டு வறுத்து வைத்துக் கொள்வார்கள். இதை சட்னி, சாம்பார், வறுவல், பொறியல், கூட்டு போன்றவற்றில் சேர்த்து உண்ண லாம். திருமணமானவுடன் அந்த திருமண தம்பதி யருக்கு இந்த மாசி கருவாடு உணவு ஒவ்வொரு வேளையும் கொடுக்க வேண்டும். இதனால் ஆண், பெண் இருபாலருக்கும் உடல் ஆரோக்கியத்தையும், மன வலிமையையும் உடல் உறுதியையும் ஏற்படுத்து வதோடு, வாத, பித்த, சிலேத்துமத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரும்.

ஆண், பெண், இருபாலருக்கும் திருமணமான காலத்தில் சிறப்பு உணவாக மாசிக்கருவாட்டை தினம் கொடுப்பர். இதனால் பெண்களுக்கு நீர்ப்பை, சினைப்பை, கருப்பை, மார்பகம், ஆகிய இந்த உறுப்பு களில் ஏற்றத்தாழ்வு இருந்தாலும் அல்லது ஒவ்வாமை இந்த உறுப்புகளில் இருந்தாலும் வாத ஓட்டம், பித்த ஓட்டம், ரத்த ஓட்டம் ஆகிவற்றை சீர் செய்து, பெண்க ளுக்கு கரு நின்று, கருவில் வளரும் குழந்தை களுக்கு ஆரோக்கியம் தந்து நோயில்லா குழந்தையாக, நோயை எதிர்க்கும் குழந்தையாக, ஆயுள் உள்ள குழந்தையாகப் பிறக்கும். திருமணமான பெண்களுக்கு தினம் மாசிக் கருவாடு கொடுப்பது நமது வழக்கில் உள்ளது.

திருமணமான ஆண்களுக்கு மாசிக்கருவாடு உணவை தினம் கொடுப்பதற்கு காரணம் மருத்துவ குணம் தான். ஆண்குறி, விதைப்பை, விந்துப்பை, நீர்ப்பை, இவைகளை சரி செய்து உணர்ச்சி பெருக் கத்தை உண்டாக்கி, விந்து திரவத்தை உண்டாக்கி, விந்துவில் உயிரணு உண்டாக்கி, அந்த விந்துவில் உண்டாகும் கரு, முழு ஆரோக்கியத்தோடும், ஆயுளோ டும் இருப்பதற்கு காரணமான வாத ஓட்டம், பித்த ஓட்டம், ரத்த ஓட்டம் ஆகியவைகளில் தாழ்வை சீர் செய்து, ஆரோக்கியமான ஆண்களாக இருப்பதற்காக இந்த மாசிக்கருவாடு உணவை தினமும் கொடுப்பது நமது குடும்ப வழக்கமாகும்.

மாசிக் கருவாடு இப்போது பெரும் பகுதி உணவில் சேர்த்து கொள்வது இல்லை. இதனால் உடல் நலக்கேடு உண்டாகுவதற்கு இந்த கருவாடு சமையலில் சேர்க்காதது தான் காரணம். இந்த மாசிக் கருவாட்டில், மற்ற கருவாடுகளில் உள்ளது போன்று முள் இருக் காது. புளியங்கொட்டையை அறுத்து வைத்தது போல் இருக்கும். அந்த மாசிக் கருவாட்டை வாங்கி அதை அப்படியே வைத்து கொள்ளலாம். எவ்வளவு நாட்கள் ஆனாலும் கெடாது. இந்த மாசிக்கருவாடு வீட்டில் வைத்தால் கருவாடு வாசனை வராது.

கருவாடு உணவில் பல்வேறுபட்ட கருவாடுகள் உள்ளன. உதாரணமாக பால் சுறா கருவாடு உடம்பில் உள்ள பால் சத்தை அதிகப்படுத்தும். குழந்தை பெற்ற பெண்களுக்கு பாலை அதிகரிக்க இந்த பால் சுறா கருவாடு கொடுப்பது வழக்கம். ஆற்றில் கிடைக்கும் சிறுவகை மீன் குள்ளமாக குண்டாக இருப்பது குள்ளக் கெண்டை என்று பெயர். அதேபோல் குள்ளமாகவும் சப்பை யாகவும் இருப்பது குள்ள கச்சக் கருவாடு ஆகும். குழந்தை பெற்ற பெண்கள் 9ஆம் தலை குளித்த பிறகு இந்த கருவாடு குழம்பை அவர்களுக்கு உணவோடு கொடுப்பார்கள். அப்படி கொடுக்கப் படுவது குழந்தையை பெற்ற தாய்க்கு நோய் வராமலும், நோயைத் தடுக்கவும், நோய் எதிர்ப்பு ஆற்றலை உருவாக்கி ஆரோக்கிய உடலைத் தரும். ஒவ்வொரு கருவாடுக்கும் ஒவ்வொரு தன்மை இருக்கும். ஆனால் மாசிச் கருவாடு, மூளை, இருதயம், நுரையீரல், கல்லீரல், கணையம், சிறுநீரகம், எலும்பு, நரம்பு, தசையைப் பலப்படுத்தும். ஆணுக்கு விந்து, அதிகரிக்கச் செய்வதோடு, குறைந்து இருந்தால் அதை ஈடுகட்டும் மிகச்சிறந்த உணவு ஆகும். தென் மாவட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் இந்த உணவு சிறப்பாக இன்றும் விரும்பி சாப்பிடுகிறார்கள். நமது பாரம்பரிய உணவாக இன்றும் கடைபிடித்து உண்டு வருகிறார்கள்.

*நன்றி : தினத்தந்தி*

## நோய் எதிர்ப்பாற்றல் – மருத்துவம்

முருங்கைக்கீரையுடன் சிறதளவு சிறுகுறிஞ்சான் கீரையைச் சேர்த்து கூட்டு சமைத்து உண்ணலாம். நம் உடலுக்குத் தேவை யான எதிர்ப்பாற்றலை வாரி வழங்கும் தாவரம் முருங்கை, இது நமக்கு இயற்கையின் வரப்பிரசாதம்.

அடுத்து, மெல்லிய கசப்பை உள்ளடக்கிய ‘பிரண்டைத் துவையல்’ மிகச்சிறந்த மரபுக் கொடையாகும். வயிற்றின் பல்வேறு சிக்கல்களைச் சீர்செய்வதில் பிரண்டையின் செயல் பாடு நிகரற்றது. நீண்டகால மூட்டு வலிகளையும் இந்தப் பிரண் டைத் துவையல் நீக்கி பெரிதும் துணை செய்கின்றது. கறிவேப்பிலைத்துவையல், பீர்க்கன்காய்த் துவையலும் நன்மை பயப்பது என்றே சொல்லலாம். ஆக, மேற்கூறிய மூன்று துவையல்களையும் அவ்வப்போது உணவாகக் கொண்டோ மானால், நம் உடலுக்கு எதிர்ப் பாற்றல் போதிய அளவில் கிடைக்கும்.

முடிவாக, வலிகளைப் பொறுத்துக் கொள்வதற்கும் எதிர்ப் பாற்றலுக்கும் நெருக்கமான உறவு உண்டு என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன! எனவே, உறைப்பு, கசப்பு ஆகிய இரு சுவை களையும் அன்றாடம் உணவில் பயன் படுத்தினால், நாம் எதிர்ப் பாற்றலைத் தமக்குள் சேமிக்கும் கொள்கலன்களாக வாழ முடியும்! வாழ்வோம்!! வளம் பெறுவோம்!!!.

**பீமபெருமாள்**
95009 30460

# கலைஞர் அவர்கள் தமிழ் இனத்தலைவர் என ஏன் போற்றப்படுகிறார்!



சைதை
மணிமாறன்



போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட் டும் என்ற பழமொழிக்கு இணங்க கலைஞர் வாழ்ந்து மறைந்தார். அவர், தம்மை பழித்து, இகழ்ந்த பேசியவர் களை பெரிதாக எண்ணியதில்லை. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு இது ஒரு இயற்கையான நியதி என்று செயல்பட்டவர் கலைஞர்.

ஆனால், தமிழினத்தையோ, தமிழையோ பழித்த வனை குற்றம் சுமத்தியவனை ஒரு நாளும் கலைஞர் மன்னித்ததும் இல்லை. அவர்களை அவர்கள் நோக்கில் விட்டு வைத்ததுமில்லை. அதன்பின் அவர்களோடு நட்பு பாராட்டியதும் இல்லை.

பிஜேபி ஆட்சி, கலைஞரின் தயவால் வாஜ்பாய் தலைமையில் ஐந்து ஆண்டுகள் நடந்தது. ஆட்சி முடிந்ததும், தமிழர் களைப் பார்த்து வாஜ்பாய், நயவஞ்சகமாய் ராசீவ்காந்தியை கொன்ற கொலை காரர்கள் என்று கூறினார். இதுதான் ஆர்.எஸ்.எஸ் இன் உண்மை முகம். முதலில் தேடி வந்து நட்புப் பாராட்டு வதும், பின்னர் அவர்களை அழித்து விடும் இச்சூழ்ச்சி கலைஞரிடம் எடுபடவில்லை.

பெரியார் தனது வாழ்நாட்களில் ஒரு சிலவற்றைப் பற்றி மிகத் தெளிவாக கூறியுள்ளார். கலைஞரோ அதை செய்து காட்டினார். உதாரணத்திற்கு ஆலய கருவறை நுழைவுப் போராட்டம் அறிவித்தார் பெரியார். கலைஞரோ அதை சட்டமாக்கி அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கி விட்டார். பெரியார், பார்ப்பனர்களின் உண்மை மனநிலையை தோலுரித்துக் காட்டினார். கலைஞர், மனுவாதிகளை மட்டுப்படுத் தினார். திமுக அல்லாத மற்றவர்களின் ஆட்சியில் இதுவரை உயர் சாதியினரான பார்ப்பனர்கள் உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். ஆனால் கலைஞ ரின் ஆட்சியில் பிற சாதிகளைச் சேர்ந்த தகுதி உள்ள அதிகாரிகள் உயர்த்தப்பட்டனர். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மனுவாதக் குழுக்கள் கலைஞரை யும் அவருடைய பாரம்பரியம் உள்ளவர்களையும் இகழ்ந்து பேசி, அவர் மக்களுக்குச் செய்த நன்மைகளை மறைத்து அவதூறு பரப்புகின்றனர். இதை ஊடகத் துறையில் உள்ள மனுவாதிகள் மிகவும் தந்திரமாக செய்து கொண்டிருக்கின்றனர்.

தம் கட்சியை உடைத்த, தன்னை துன்புறுத்திய, பழித்துப் பேசிய இந்திரா காந்தியுடன் கலைஞர் கூட்டணி வைத்தார். ஆனால் தமிழ் இனத்தை, தமிழரைப் பார்த்து கொலைகாரன் என்று கூறி, தமிழ் இனத்தை அவமானப்படுத்திய மனுவாதிகளுடன் கூட்டணி வைக்காமல், பண்டாரங் கள், பரதேசிகள் என அவர்களை மட்டுப்படுத்தினார்.

அறிந்தோ அறியாமலோ தமிழகத் தலைவர்கள் தான் இந்திய நாட்டின் தலைமை அமைச்சர்கள் தேர்ந்து எடுக்கின்றனர். தமிழர்கள் தேர்ந்து எடுத்த தலைவர்களால் மட்டுமே ஐந்து ஆண்டுகள் நிலையான ஆட்சியை கொடுக்க முடிந்திருக்கிறது. ஐயா காமராசர் இரண்டு தலைமை அமைச்சர்களைத் தேர்ந்து எடுத்தார். ஐயா கருப்பையா மூப்பனார் ராசீவ்காந்தி யைத் தேர்ந்தெடுத்தார். கலைஞர் மூன்று பிரதமர் களைத் தேர்ந்தெடுத்தார். அண்ணா திமுக எம்பிக்கள் மோடியை ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்ய வைத்திருக் கின்றனர்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ஆட்சிக்கு மட்டும் மனுவாதம் எப்போதுமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ குழி தோண்டிக் கொண்டே இருக்கும். கலைஞர் தமிழர்களுக்கு எதிரானவர் என்று ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

இலங்கையில் தமிழர்களுக்கு ஓரளவுக்கு ஆதரவான ரணில் விக்கிரமசிங்கே, இலங்கைத் தேர்தலில் வெற்றி பெரும் சூழல் உருவானபோது மனுவாதக் கைக்கூலிகள் மூலமாக, இலங்கையில் உள்ள புலிகளின் தலைமைக்கு தேர்தலை புறக்கணிக்க ஆலோசனை கூறியது. இதனால் ரணில் தோற்று ராசபக்சே வெற்றி பெற்றான். அதன்பின் ராசபக் சேவுக்கு பக்கபலமாக, துணையாக மனுவாதிகள் நின்று யுத்தத்தை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

யுத்தம் தொடங்கிய போது, பல போராளிகள் காயம் அடைந்தனர். அவர்கள் விசைப்படகு மூலம் இந்தியாவிற்குள் வந்தனர். அப்போது அமைச்சராக இருந்த தமிழர், தமிழுணர்வால் உந்தப்பட்டு இந்திய எல்லையில் கடலோர காவல் படையினருக்கு வாய்மொழி உத்தரவிட்டு பலரை காப்பாற்றினார். மேலும் பலபேர் காயங்களுடன் இந்தியாவிற்குள் வந்தனர். அந்த வேளையில் யுத்தம் நடந்து கொண்டே இருந்தது. இச்சூழலில் பொதுமக்கள், குழந்தைகள் என்று ஆயிரம் ஆயிரம் பேர் விடுதலைப்புலிகளின் படகுகளில் ஏறி, தமிழகம் சென்று, போரிலிருந்து தப்பிக்கலாம் என்று கடற்கரையில் குவிந்தனர். ஆனால், அவர்களை எல்லாம், (பொதுமக்கள்) விடுதலைப்புலிகள் கேடயமாகப் பயன்படுத்தினர் என்று நஞ்சு வார்த்தைகளை விதைத்தான் ராசபக்சே, விடுதலைப்புலிகளை அழிக்க வேண்டும் என்பதற்காக. போர் நடந்து கொண்டிருந்தபோது தமிழகத்தில் இருந்து, தமிழக இரண்டாம் கட்டத் தலைவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்பு கொண்டு, நாங்கள் ஆயுதங்களை கீழே போடுகின் றோம் என ஒரு பேக்ஸ் மட்டும் கொடுங்கள். மற்றவற்றை நாங்கள் பார்த்து, உடனே போரை முடிவுக்கு கொண்டு வருகிறோம் என கூறி அவர்களிடம் மன்றாடினார்கள். ஆனால், மனுவாத ஒற்றர்கள் இவ்வளவு தமிழ் மக்களை இழந்துள்ளோம். மேலும், இவ்வளவு தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளதால், ஐநாவில் எளிதாக தனிநாடு அங்கீகாரம் பெற்று விடலாம் என்ற ஒரு தவறுதலான கருத்தை விடுதலைப்புலிகள் தலைமைக்குத் தெரிவித்து புலிகளின் தலைமையில் மாறுதல் ஏதும் வராமல் பார்த்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

தான் ஆடவில்லை என்றாலும் தன் சதை ஆடும் என்பர். அதுபோல விடுதலைப்புலிகளிடம் இருந்து சாதகமாக பதில் கிடைக்கவில்லை என்றாலும், கலைஞர் நடுவண் அரசுக்கு மிகப் பெரிய அழுத்தம் கொடுத்தார். இதை உணர்ந்த மனுவாதிகள் அவாட்களை இலங்கைக்கு அனுப்பி, தமிழக ஆட்சியாளர் கலைஞரின் அழுத்தத்தை இலங்கைக்கு எடுத்துக்கூறி போரை உடனே முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்று அனுப்பி வைத்தனர். ஆனால், அவாள் என்ன செய்வாள் என்பதை புரிந்து கொண்ட கலைஞர், தனது வயதான காலத்திலும், தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் உண்ணா நோன்பு இருந்தார். அந்த நேரத்தில் டெல்லியில் இருந்து தமிழகத்திற்கு போர் நிறுத்தப்பட்டு விட்டது என்ற செய்தி வந்தது. கலைஞர் உண்ணாநோன்பை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார்.

கலைஞர் உண்ணா நோன்பு இருந்தபோது, போர் நிறுத்தப்பட்டுவிட்டது என்று இந்திய நாட்டின் உள்துறைக்கு இலங்கையில் இருந்து செய்தி அனுப்பிய அதிகாரி யார்? அவர் எந்தப் பதவியில் உள்ளார் என்று, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலே இல்லை.

ராசீவ்காந்தி கொலையில் ஈடுபட்டவர்கள் என்று சிறையில் இருக்கும் அப்பாவிகள் விடுதலை செய்யப்படும் சூழல் உருவானபோது இங்கிருந்த ஒரு மனுவாத ஆசாமி? ராசபக்சேவை இந்தியாவிற்கு அழைத்து வந்து, அந்தச் சூழலைக் கெடுத்தார்.

தந்தை பெரியார் அவர்கள் 1944ஆம் ஆண்டு, இந்தியாவை பிராமணர்கள் ஆட்சி செய்யக்கூடாது. அதற்கு வெள்ளைக்காரனே ஆட்சி செய்தாலும் பரவாயில்லை என்று கூறினார். இந்தியா இலங்கை என பிரிந்து இல்லாமல் ஒரே நாடாக இருந்தால், தமிழினம் இந்தியாவில் பெரும்பான்மை இனமாக இருந்திருக்கும். ஆங்கிலேயர் ஆட்சி செய்வதற்கு முன்பு இலங்கையை தமிழ் மன்னர்கள் தமிழ்நாட்டுடன்

இணைத்து ஆட்சி செய்தனர் என்பது யாவரும் அறிந்த வரலாறு. ஆனால், எப்போதுமே கெடுமதி உள்ள ஆரியக்கூட்டம் இந்தியா வேறு, இலங்கை வேறு என்று வெள்ளைக்காரனுக்குச் சொல்லி தனித்தனியாக விடுதலை பெற வைத்தனர். இச்சூழ்ச்சியால் இந்தியாவில் தமிழ் இனம் சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டது.

இந்தியாவுடன் இலங்கை இணைந்த பகுதியாக இருந்திருந்தால் இன்று இலங்கையில் நடந்த படுபாதகக் கொலைகள் நடந்திருக்காது. தமிழினம் சிறுபான்மையாக இருந்திருக்காது. புராணப்படி ராமர் இலங்கை சென்று, அங்கு ஆட்சி செய்த தமிழ் மன்னர் இராவணனை அழித்தான். இன்று அதே இடத்தில் இருந்து ஆட்சி செய்யும் மனுவாதிகள் தமிழனை அழித்தனர். அதனால்தான் பெரியார் “என் தலைவனாகிய ராவணனை அழித்த ஒருவனை நான் எப்படி கடவுளாக ஏற்க முடியும்?” என்று ராமருக்கு செருப்பு மாலை அணிவித்தார். இன்று நவோதயா பள்ளிகளின் வருகையால் தமிழரின் வரலாறும் அழிக்கப்படுகிறது. காமராசர், இந்திரா காந்தியை தலைமை அமைச்சராக ஆக்கினார் என்ற காழ்ப்புணர்வினால் அன்று காமராசரை மனுவாதிகள் கொலை செய்ய முயற்சி செய்தனர். அது முடியாமல் போகவே இன்று நாடார் சமூகத்தைப் பற்றி அவதூறாக சிபிஎஸ்சி பாடப்புத்தகத்தில் எழுதி உள்ளனர்.

நடுவண் அரசில் நாடார் சமுதாயத்துக்காரரை அமைச்சராக வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டுத் தலைவராக நாடார் சமுதாயத்துக்காரரை வைத்துக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறார்கள் என்பது வேதனையானதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். இம்மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்தால், பல திரிபுகள் வரலாறாக மாறிவிடும் அபாயம் உண்டு என்பதை நாம் எல்லோரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதானி இருபத்தைந்து ஆண்டுகளில் உலகக் கோடீசுவரன் ஆகலாம். எழுபது ஆண்டுகளில் ரிலையன்ஸ் உலக கோடீசுவரன் ஆகலாம். ஆனால் ஏழு படம் நடித்து, எழுபது படங்களுக்கு மேல் டிஸ்ட்ரிபியூசன் செய்த உதயநிதி ஒரு கார் வாங்கினால், அது கலைஞர் வாங்கிக் கொடுத்த கார் என்று பரப்புரையை மனுவாதிகள் செய்கிறார்கள். மனுவாதிகள் என்ற முத்திரையோடு மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் பள்ளிக்கூடம் கட்டிக் கொண்டு, அதற்கு வாடகை உயர்த்தப்பட்டால் வாடகை கட்டமாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டவர்கள் எல்லாம் ஊடகங்களில் நல்லவர்களாகவும் கொடை வள்ளல்களாகவும் சித்தரிக்கப்படுவது யாராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

தாங்கள் மட்டுமே உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும். தமது இனத்தார் மட்டுமே ஆள வேண்டும், நாங்கள் மட்டுமே உயர்வு என்று நினைத்து வாழ்ந்த கூட்டத்தின் எண்ணங்களை உடைத்து எறிந்தவர் கலைஞர். இந்தியாவில் முதல்முதலில் டைட்டல் பூங்காவை உருவாக்கி ஆடு மேய்ப்பவர்கள் குழந்தைகளும் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயக் குழந்தைகளும் ஒடுக்கப்பட்டவர்களின் குழந்தைகளும் பொருளாதாரத்தில் முன்னேற வழிவகை செய்தவர் கலைஞர்.

தமிழர்களின் வரலாறு மறைக்கப்படுகிறது. கீழடி அகழாய்வுகள் தமிழர் வரலாறைச் சொல்கின்றன. அதையும் முழுமையாக வெளிவராமல் தடுப்பது மனுவாதக்கூட்டம். முதலாம், இரண்டாம் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழை வளர்த்த தென் மதுரை, கடலின் உள்ளே இருக்கிறது. இதற்கு பல தரவுகள் சாட்சி கூறுகின்றன. இச்செய்தியெல்லாம் இன்றைய தலைமுறைக்கு மறைக்கப்படுகிறது. இளைய தலைமுறையினரை கருத்தில் கொண்டு, தமிழர்களின் பெருமை களை உரக்கச் சொல்வது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும். ●

# தமிழ் இனிமையானது!

உயிர் எழுத்து பன்னிரெண்டு
மெய் எழுத்து பதினெட்டு
உயிர்மெய் எழுத்து இருநூற்றி பதினாறு
ஆய்த எழுத்து ஒன்று என மொத்தம்
இருநூற்று நாற்பத்தேழு எழுத்துகள் கொண்டது தமிழ்!

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை இலக்கணம் உடையது!
வல்லினம், மெல்லினம், இடையினம், கொண்ட இனிய மொழி!
எதுகை, மோனை போன்ற நடையுடையது!

– ஆக தமிழ் இனிமையான மொழி நடையைக் கொண்டது!

தமிழ்ச் சொற்கள் இனிமையானவை! வலிமை மிக்கவை!
பையச் சென்றால் வையந்தாங்கும் என்றும்,
தமிழர்கள் அந்தியில் நடைபெற்ற அங்காடியை
இனிய தமிழில் அல்லங்காடி என்றும்
பகலில் நடைபெற்ற அங்காடியை நாளங்காடி என்றும் அழைத்தனர்!
பொங்கு அருவி தூங்கும் மலை பொதிய மலை என் மலையே
என்று செம்மாந்து பாடினாள் பொதிய மலைக் குறத்தி!
தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும் எனப்பாடியது
திருக்குற்றாலக் குறவஞ்சி!
இதன்மூலம் தமிழின் இனிமை பறைசாற்றப்படுகிறதல்லவா!

# சமூக நீதியை காவு வாங்கவே உயர் வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு

## முனைவர். தொல். திருமாவளவன் உரை



மேலோட்டமாகப் பார்த்தால் ஏழை மக்களுக்கு அரசு நல்ல காரியத்தை செய்திருக்கிறது என்பது, சரியாகத் தோன்றும். சாதாரணமான சாமானியர்கள் கூட இந்த லாஜிக் இந்த தர்க்கத்தை புரிந்து கொள் வார்கள். ஏழை மக்களுக்கு இட ஒதுக்கீடு தருவது சரிதான்.அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் என்ன அடிப்படை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இட ஒதுக்கீடு என்பது மக்கள் தொகையை கணக்கெடுத்து சாதி அடிப்படையிலே ஒவ்வொருவரும் பங்குபோட்டுக் கொள்வது அல்ல. இட ஒதுக்கீட்டுக்கு ஒரு கோட்பாடு இருக்கிறது. அது தான் நாம் அறிந்த சமூகநீதி கோட்பாடு. சமூகநீதி என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொண்டால் இதை தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

அதற்கு முன்னதாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இட ஒதுக்கீடு எங்கே இருக்கிறது அரசுத்துறைகளில் பொதுத்துறைகளில் இருக்கிறது. மாநில அரசு, மத்திய அரசு, பொதுத்துறை பப்ளிக் செக்டார். ஒட்டுமொத் வேலை வாய்ப்பில் நூறு சதவீதம் எடுத்துக் கொண்டால் இந்த அரசு மற்றும் பொதுத்துறைகளைச் சார்ந்த வாய்ப்புகள் என்பது வெறும் பதினைந்து சதவீதம் தான். 85 சதவீதம் தனி யார் துறைகளாக இருக்கின்றன. 15 சதவீதத்தில் மட்டும் தான் இட ஒதுக்கீடு. இந்த 15 சதவீதத்தில் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கிடையாது. குறிப்பாக பல்கலைக் கழகங்களில் பேராசிரியர் பணி இடங்களில் ஒதுக்கீடு கிடை யாது. துணைவேந்தர் நிய மனங்களில் இட ஒதுக் கீடு கிடையாது. உயர்நீதிமன்ற

# காலங்காலமாக இந்த மண்ணில் நிலைப்படுத்தப்பட்டிருக்கிற மிகக்கேவலமான,மிக இழிவான மனிதர்களிடையே தாழ்வுமனப்பான்மை என்கிற உளவியலை கட்டமைத் திருக்கக்கூடிய அந்த சனாதனத்தை வீழ்த்துவதற்காகத்தான் "சமூகநீதி"

நீதிபதி நியமனங்களில் இட ஒதுக்கீடு கிடையாது. அதிகாரம் மிகுந்த எந்த பதவிகளிலும் இட ஒதுக்கீடு கிடையாது. Entry level நாலாந்திர வேலைகளில் தான் இடஒதுக்கீடு. இதுவே ஒரு ஏமாற்று வேலை இன்றைக்கு இந்த எழுபது ஆண்டுகளில் இட ஒதுக்கீடு என்பது எப்படி நடைமுறையில் இருக்கிறது என்றால் அது Scheldule caste, schuldule caste க்குஅதிகபட்சம் 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு நடைமுறைக்கே வரவில்லை. OBC க்கும் அந்த நிலைதான்.

சமூக நீதி என்றால் என்ன? இந்தியாவிலே இரண்டு கோட்பாடு ளுக்கு இடையிலே ஒரு நீண்ட நெடிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு கோட்பாடு நம்முடைய நண்பர் ராகவன் அவர்கள் மிக அருமையாகச் சொன்னார், இந்தியாவிலே 85 விழுக்காடு இந்துச் சமூகம் இருக்கிறது என்று. இந்துச் சமூகத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் இட ஒதுக்கீடு என்பது இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. அவர்கள் இந்துக்களாக இருந்தால் Scheldule caste இட ஒதுக்கீடு உண்டு. இதிலே equality என்பது அடிபட்டு போய்விடுகிறது.

பாராட்டு அல்ல, கட்சியை விட்டுறுங்க. நான் பி.ஜே.பி.க்கு எதிராக பேசவில்லை, ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக பேசவில்லை, மோடிக்கு எதிராக பேசவில்லை, concept பேசுறேன். இந்துச் சமூகத்தில் நம்முடைய நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து சாதியப்பிரிவுகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் வருணப் பிரிவுகளாக இருந்தன. காலப்போக்கிலே சாதிப்பிரிவுகளாக மாறி யிருக்கின்றன. நாமெல்லாம் என்ன நினைத்து கொண்டிருக்கிறோம் என்றால், தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் தான் சாதிப்பிரிவுகளிலிருந்து இழிவுபடுத்தப் படுகிறார்கள். அவர்கள் அவமதிப்புக்குள்ளாகிறார்கள் என்று நாம் கருதிக்கொண்டிருக்கிறோம். அதுவே முதலில் பிழை. ஒவ்வொரு சாதிக்கு இடையிலும், ஒவ்வொரு தனிமனிதனுக்கு இடையிலும் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் சாதியம்.

பிராமணர் என்கிற வருணத்திற்குள்ளே இருக்கிற பல சாதிகள் சமமானவையா, வடநாட்டிலே இருக்கிற ஐயரும், ஐயங்காரும் சமமானவர்களா? கேரளாவில் இருக்கிற நம்பூதிரியும், தமிழ்நாட்டில் இருக்கிற ஐயர், ஐயங்காரும் சமமா? பார்ப்பன சமூகத்திற்குள்ளேயே ஈமச்சடங்கு செய்யும் பார்ப்பனர்கள் சவுண்டி பார்ப் பனர்கள், சவுண்டி பார்ப்பனர்களும், கோவிலில் பூசாரி வேலை செய்கிற பார்ப்பனர்களும் சமமா? பெண் எடுக்க,கொடுக்க முடியுமா? முடியாது. இந்த இழிவு ஒவ்வொரு சமூகத்திற்கும் இருக்கிறது. ஒவ்வொரு சாதிக்கும் இருக்கிறது. ஒவ்வொரு ஆணுக்கும் இருக்கிறது, ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கிறது. இந்த இழிவை இந்த சமூகத்தில் திணித்தது எது அதுதான் சனாதனக் கோட்பாடு. உயர்வுத் தாழ்வு என்கிற உளவியலை இங்கே நிலை நிறுத்தியிருக்கிறது.

நாம் பக்கத்து பக்கத்து நாற்காலியில் உட்கார்ந் திருப்போம், ஆனா ஒருத்தனுக்கு நான் உயர்ந்த சாதி என்கிற திமிர் இருக்கும். இன்னொருத்தனுக்கு தாழ்ந்த சாதி என்கிற தாழ்வுமனப்பான்மை இருக்கும். அந்த ஆணவத்தையும், இந்த தாழ்வு எண்ணத்தையும் நமக் குள்ளே காலங்காலமாக இந்தச் சமூகம் விதைத்திருக் கிறது. பெண் எவ்வளவுதான் படித்திருந்தாலும், ஆண் என்கிற திமிர் ஆண்களுக்கு இருக்கிறது. பெண்ணை தாழ்வாக பார்க்கிற பார்வை ஆண்களின் உள்ளத்தில் ஊறிப்போய் கிடக்கிறது. இந்த உளவியலை இந்த மண்ணில் நீண்ட நெடுங்காலமாக நிலைப்படுத்திய கோட்பாடு சனாதனக் கோட்பாடு. இந்த தராதரக் கோட்பாடு நீண்ட நெடுங்காலமாக இந்த மண்ணிலே யுத்தம் நிகழ்த்திக் கொண்டே இருக்கிறது.

இந்த சனா தனத்தால் கல்வி மறுக்கப்பட்டது, கல்வி மறுக்கப் பட்டதால் பெண்கள் முடக்கப் பட்டார்கள். கல்வி மறுக்கப்பட்டதால் சூத்திரர்கள் முடக்கப்பட்டார்கள். கல்வி மறுக்கப்பட்டதால் ஒடுக்கப்பட்டவர்கள் முடக் கப்பட்டார்கள். ஆயிரக் கணக்கான தலைமுறைகளாக இப்படி மறுக்கப்பட்ட கல்வியை மீண்டும் பெறுவதற் காக வழங்கப்பட்ட முன்னுரிமை தான் Presidential rights என்பது. அதுதான் சமூக கோட்பாடு. கை,கால் இல்லாதவனுக்கு சக்கர வண்டி கொடுக்கிறோம். நல்லா இருக்கிறவன் எனக்கும் சக்கரவண்டி கொடுங்க. என்ன அவனுக்கு மட்டும் தான் கொடுப்பீங்களா காலங் காலமா, ஏன் நாங்களும் ஏழை தான் எங்களால் சக்கர வண்டி வாங்கமுடியாது, நாங்களும் உட்கார்ந்து கொண்டுதான் போவோம், என்று கேட்டால் எப்படி இருக்கும்.

கை,கால் நொண்டியாக இருப்பவனுக்குத் தானே சக்கரநாற்காலி. கோட்பாட்டுக்கு எதிரான ஒரு ஆபத்து என்பதால் தான் எதிர்க்கிறோம். சமூக நீதிக் கோட்பாட்டுக்கு எதிரான நடவடிக்கை இது. முற் பட்ட வகுப்பினருக்கு கொடுப்பதை பற்றி எங்களுக்கு கவலை இல்லை. அரசாங்கத்திற்கு வறுமையை ஒழிப்பதற்கு எத்தனையோ பல திட்டங்கள் இருக் கிறது, அந்த திட்டங்களை நடைமுறைப்படுத் தட்டும். யாரும் அதை மறுக்கப்போவதில்லை, scholarship கொடுங்க யாரும் மறுக்கப்போவதில்லை, கடனுதவி கொடுங்க, தொழில் செய்வதற்கு வாய்ப்பு களை ஏற்படுத்திக் கொடுங்க.

இந்தியாவில் எந்தவொரு ஏழை முற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாவது கக்கூஸ் கழுவி

பார்த்திருக்கிறீர்களா, இந்தியாவில் எந்த பிராமணனாவது ஆடு, மாடு மேய்த்துப் பார்த்திருக்கிறீர்களா இன்றைக்கு. இழிவான தொழில்களை ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே செய்து கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறதே இது அவன் ஏழை என்பதற்காகவா செய்கிறான். தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் இப்படிப்பட்ட இழிவுத் தொழிலைச் செய்வதற்கு நீண்ட நெடுங்காலமாக இந்த மண்ணிலே நிலைப்படுத்தப்பட்டிருக்கிற சனாதனாக் கொள்கை.

அந்த சனாதனத்திற்கு எதிராக கண்டறியப்பட்ட ஒரு மகத்தான கண்டுபிடிப்புதான் சமூக நீதிக் கோட்பாடு Social justice. Economical creteria என்பது அவர்கள் இங்கு கொண்டுவந்திருப்பது என்பது, Social justice என்கிற கோட்பாட்டை முற்றிலும் அழிப்பதற்கான ஒரு சதி முயற்சி. ஆகவே, இதை எதிர்க்கிறோம். இடஒதுக்கீட்டை வெறும் மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து நீங்கள் கணக்கு போடக்கூடாது, வறுமையைப் பார்த்து கணக்கு போடக்கூடாது. காலங்காலமாக இந்த மண்ணில் நிலைப்படுத்துப் பட்டிருக்கிற மிகக் கேவலமான, மிக இழிவான மனிதர்களிடையே தாழ்வுமனப்பான்மை என்கிற உளவியலை கட்டமைத்திருக்கக் கூடிய அந்த சனாதனத்தை வீழ்த்துவதற்காகத்தான் சமூகநீதி ஒன்றைச் சொல்லி நிறைவு செய்கிறேன்.

இந்த இட ஒதுக்கீடு வந்து சாதி ஒழிந்துவிடுமா? என்று கேட்கிறார்கள், நான் சொல்லுகிறேன் சாட்சியம் சொல்லுகிறேன், இந்த ஒதுக்கீடு இருந்ததால் எனக்கு கல்வி பெறும் வாய்ப்பு கிடைத்தது. இந்தக் கல்வி எனக்கு என்ன உணர்வைத் தந்திருக்கிறது என்றால், என்ன துணிவைத் தந்திருக்கிறது என்றால், என்னை விட ஒருவன் கல்வியில் உயர்ந்தவன், என்னை விட ஒருவன் பொருளில் உயர்ந்தவன் இருக்கலாம், என்னை விட ஒருவன் பதவியில் உயர்ந்திருக்கலாம், என்னை விட ஒருவன் ஆற்றலால், அறிவால் உயர்ந்திருக்கலாம், ஆனால் என்னை விட ஒருவன் சாதியால் உயர்ந்தவன் இல்லை, என்கிற துணிவை எனக்கு தந்திருக்கிறது, என்னை விட எவனொருவனும் சாதியால் எவனும் உயர்ந்தவன் இல்லை, இந்த துணிவை எனக்கு தந்திருப்பது நான் கற்றிருக்கிற கல்வி.

இப்படி கோடானகோடி மக்களுக்கு உணர்வு தருகிறபோது, சாதி தானாக உதிர்ந்து போகும் பழுத்த இலைகளை போல. எவனும் சாதியை ஒழிக்கவேண்டிய அவசியமில்லை, எவருக்கெல்லாம் தாழ்வு உளவியல் இந்த மண்ணில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறதோ அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் எனக்கு மேல் எவனும் தரத்தால் உயர்ந்தவன் இல்லை என்ற எண்ணத்தை பெறுகிறானோ அன்றைக்கு சாதி ஒழியும், அன்றைக்கு சமூகநீதி தேவையில்லை, அன்றைக்கு இட ஒதுக்கீடு தேவையில்லை என்பதைச் சொல்லி பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பது சமூக நீதியை குழி தோண்டி புதைப்பதற்கான ஒரு மறைமுகச் சதிச் செயல் என்பதைச் சொல்லி நிறைவுசெய்கிறேன், நன்றி வணக்கம். ●

# தமிழ்மறையின் தகவல் முத்துகள்

**இலக்கியச் சுடர் முனைவர் இறைமறைதாசன்**

திருக்குறளின் மொத்த எழுத்துகள் 4291

தமிழ் எழுத்துக்களான 247இல் திருக்குறளில் இடம் பெறாத எழுத்துக்கள் 37 எழுத்துக்கள்

அதிகமாக அதாவது, 1705 முறை பயன்படுத்தப் பட்ட ஒரே எழுத்து னி

ஒருமுறை மட்டுமே கையாளப்பட்ட இரு எழுத்துக்கள் ளீ, ங

இடம் பெறாத ஒரே எண் ஒன்பது

பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து ஔ

திருக்குறளில் இடம் பெறும் இரண்டு மலர்கள் அனிச்சம், குவளை

திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் நெருஞ்சிப்பழம்

திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை குன்றிமணி

திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் பனை, மூங்கில்

கி.பி.2016 வரை திருக்குறள் உலகின் 82 மொழிகளில் வெளிவந்து உள்ளது.


ஆங்கிலத்தில் மட்டும் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.


திருக்குறளில் புகுந்துவிட்ட வடமொழிச் சொற்கள் 16

அவை, அந்தம், அமரர், அவி, ஆகுலம், ஆசாரம், ஆதி, இந்திரன், கணம், கவரி, காரணம், சலம், நாமம், பாக்கியம், பாவம், பாவி, வித்தகர்.

**திருக்குறள் நூலின் பழைய உரையாசிரியர்கள்:**

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பகுதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிபெருமாள், காளிங்கர்.





# மருத்துவம்

தீராத முற்றிய நிலையிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு, ஒருமரபு வழியில்லாத சிகிச்சை முறை அளித்ததில், பெரும்பாலானோர், நோயிலிருந்து மீண்டிருக்கின்றனர்.

முதலில் அவர், நோயாளிகளின் நோயைக் குணப் படுத்த சூரிய ஆற்றலைப் பயன்படுத்தினார்.

உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு ஆற்ற லைப் பயன்படுத்தி செய்யும் இயற்கை வழிச் சிகிச்சை முறையில் நம்பிக்கையுடைய ஒருவரது கட்டுரையைப் பார்ப்போம்.

“புற்றுநோயைக்குணப்படுத்தும் உத்திகளில் இதுவும் ஒன்று!!! புற்றுநோயைக் குணப்படுத்தும் எனது சிகிச்சை முறைகளில் சமீபகால வெற்றி விகிதம் 80%.

புற்று நோயாளிகள் மரணத்தைத் தழுவக்கூடாது. புற்று நோயாளிக்கான சிகிச்சை ஏற்கனவே கண்டறியப் பட்டுள்ளது.

அது நாம் பழங்களை உணவாக எடுத்துக் கொள்ளும் முறையில் உள்ளது. நீங்கள் நம்புவீர்களோ இல்லியோ இதுவரை வழக்கமான சிகிச்சை முறையில் இறந்த நூற்றுக்கும் அதிகமான புற்று நோயாளிகளுக் காக நான் வருத்தப்படுகிறேன்.

எல்லோரும் நினைப்பது பழங்கள் சாப்பிடுவது என்றால் அவற்றை விலைக்குவாங்கி, வெட்டி, வாயி லிட்டு சாப்பிடுதல் என்று. நீங்கள் நினைப்பது போல் எளிதானதல்ல அது, பழங்களை எப்படி அதுவும் எப்போது சாப்பிட வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

பழங்களைச் சாப்பிடுவதென்றால், உணவு உண்ட பிறகு பழங்களை உண்பது அல்ல!பழங்களை வெறும் வயிற்றிலேயே சாப்பிட வேண்டும்!!! பழங்களை வெறும் வயிற்றில் எடுத்துக் கொண்டால், அது நம் உடலின் நச்சுக்களை வெளியேற்றுவதிலும், எடைக்குறைப்பு, வாழ்வின் செயல்களுக்குத் தேவையான அதிகப்படியான ஆற்றலைத் தருவதிலும் பெரும் பங்கு வகிக்கிறது!!!

சாதாரணமாக நீங்கள் இரண்டு துண்டுகள் பிரட், அதன் பின் ஒரு துண்டு பழம் என்று எடுத்துக் கொள்கிறீர்கள் எனக்கொள்வோம். பழத்துண்டு வயிற்றின் வழியே நேராகக் குடலுக்குள் செல்லத் தயாராக இருக்கிறது. ஆனால் பழத்திற்கு முன்னால் எடுத்துக்கொண்ட பிரட்டினால் பழம் குடல் பகுதிக்குச் செல்வது தடுக்கப்படுகிறது.

இந்த சராசரி நேரத்தில் முழு உணவான பிரட் மற்றும் பழம் இரண்டும் அழுகி, புளித்து, அமிலமாக மாறுகிறது. பழம் வயிற்றிலுள்ள உணவு மற்றும் செரிமானத்துக்கு உதவும் சாறுகளுடனும் சேரும் நிமிடத்தில். அந்த முழு நிறையான உணவு கெட்டுப் போக ஆரம்பிக்கிறது. அதனால் தயவு செய்து பழங் களை வெறும் வயிற்றில் அல்லது உணவுக்கு முன் சாப்பிடுங்கள்!!!

“ஒவ்வொரு முறை நான் தர்ப்பூசணி பழம் எடுக்கும் போதெல்லாம் எனக்கு ஏப்பம் வருகிறது. எப்போது நான் துரியன் பழம் சாப்பிட்டாலும் வயிறு ஊதிக் கொள்கிறது. எப்போது நான் வாழைப்பழம் சாப் பிட்டாலும், அவசரமாகக் கழிவறைக்கு ஓடவேண்டி யிருக்கிறது. இதுபோல் இன்னும் பல புகார்களை பலர் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்.

உண்மையில் நீங்கள் வெறும் வயிற்றில் பழம் எடுத்துக்கொண்டால் இந்த மாதிரி நிலைமை தோன்றாது! உணவுக்குப் பின் பழம் எடுக்கும் போது பழமானது மற்ற உணவுடன் சேர்ந்து அழுகுவதால் வாயு உற்பத்தியாகி வயிறு ஊதக்காரணமாகிறது!

நரைமுடி தோன்றுவது, தலையில் வழுக்கை விழுவது, நரம்புகளின் திடீர்எழுச்சி, கண்களின் கீழ்வளையம் தோன்றுவது இவையெல்லாமே, வெறும் வயிற்றில் பழங்கள் எடுத்துக்கொண்டால் நடக்காமல் தடுக்கப்படும்.

ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களெல்லாம் அமிலத்தன்மையுடையவை என்பதெல்லாம் உண்மை யில்லை! ஏனென்றால் ஆய்வு முடிவுகளின்படி எல்லாப் பழங்களும், நமது உடலுக்குள் சென்றதும் காரத் தன்மையுடையவையாகின்றன. சரியான முறையில் பழங்கள் சாப்பிடும் வகையை முழுவதுமாக அறிந்து கொண்டால், நமக்கு அழகு, நீண்ட ஆயுள், உடல் ஆரோக்கியம், உடலுக்குத் தேவையான ஆற்றல், மகிழ்ச்சி, சரியான எடை இவற்றைப் பெறும் இரகசியம் கிடைத்துவிடும்.

நீங்கள் பழச்சாறு அருந்தும் தேவை ஏற்படும் போது, புதிதான பழச்சாறுகளையே அருந்துங்கள் டின், பாக்கட் மற்றும் பாட்டில் இவற்றில் அடைக்கப்பட்ட ரெடிமேட் பழச்சாறுகள் வேண்டாம்.

சூடாக்கப்பட்ட பழச்சாறுகளையும் குடிக்க வேண்டாம். பதப்படுத்தப்பட்ட, சமைத்த பழங்களை யும் உண்ணாதீர்கள் ஏனெனில் அவற்றிலிருந்து உங்களுக்கு எந்தவிதமான சத்துக்களும் கிடைக்காது. சமைத்த பழங்களில் அதிலுள்ள விட்டமின்கள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன. உங்களுக்கு அதன் சுவை மட்டுமே கிடைக்கிறது. ஆனால் பழச்சாறு அருந்துவதை விட பழங்களை முழுதாகச் சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

நீங்கள் பழச்சாறு குடிப்பதாயிருந்தால், மடமட வென்று குடிக்காமல் மெதுவாக ஒவ்வொரு வாயாக அருந்தவும் ஏனென்றால், நீங்கள் பழச்சாறு விழுங்கு வதற்குமுன், அதனை வாயிலுள்ள உமிழ் நீரோடு நன்கு கலக்கச் செய்து பின் உள்ளே அனுப்பவும். உங்கள் உடல் உறுப்புக்களைச் சுத்தம் செய்யவும். உடலிலி ருந்து நச்சுக்களை வெளியேற்றவும், ஒரு 3 நாட்கள் பழங்கள் மட்டுமே எடுத்துக்கொண்டு விரதம் இருக் கலாம்.

அந்த 3 நாட்களும் பழங்களை மட்டும் சாப்பிட்டு, மற்றும் புதிதாய் எடுக்கப்பட்ட பழச்சாறுகளையும் மட்டுமே நாள் முழுவதும் எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த டயட்டின் முடிவு நீங்களே ஆச்சரியப்படும் படி. நீங்கள் மிகவும் அழகாய் வனப்புடன் தோற்ற மளிப்பதாய் உங்கள் ஃப்பிரண்ட்ஸ் கூறும்போது உணர் வீர்கள்.

கிவி பழம், இது ஒரு சிறிய ஆனால் வலிமை மிகுந்த பழம் இப்பழம். பொட்டாசியம், மக்னீஷியம், விட்டமின் ஈ மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்த ஓர் நல்ல பழம். ஆரஞ்சுப்பழத்தை விட விட்டமின் சி சத்து கிவி பழத்தில் இரண்டும் மடங்கு அதிகம் உள்ளது.

ஆப்பிள், ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் என எடுத்துக்கொண்டால் நோயின்றி வாழலாம் என்று சொல்வது உண்மையே!

ஆப்பிளில் விட்டமின், “சி“ சத்து குறைவாக இருப்பினும் அதில் உள்ள antioxidants, flavonoids

போன்றவை இந்த விட்டமின் சி சத்துக்களை மேம்படுத்துவதால் பெருங்குடல் புற்றுநோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்துக்களைக் குறைக்கிறது!

ஸ்ட்ராபெர்ரி, பாதுகாப்புத்தரும் பழம். இந்தப் பழத்தில் மற்ற எல்லாப் பழங்களையும்விட மொத்த Antioxidant ஆற்றல் இருப்பதால், இது நம் உடலில் சுதந்திரமாய் கட்டுப்பாடற்று பல்கிப்பெருகும் அடிப்படைக்கூறுகளால் (free radicals) இரத்த நாளங் களில் அடைப்பு, புற்றுநோய்க் காரணிகள் பெருகுதல் முதலியவை ஏற்படாமல் நம்மைப் பாதுகாக்கிறது.

ஆரஞ்சு, இனிப்பான மருந்து ஒரு நாளைக்கு 24 ஆரஞ்சு எடுப்பது ஜலதோஷத்தை விலக்கும். கொழுப் பைக் குறைக்க உதவும் மேலும் சிறுநீரகக்கற் களைக் கரைப்பதோடு கற்கள் வராமலும் தடுக்கும். அதனுடன் பெருங்குடல் புற்றுநோயின் ஆபத்தினைக் குறைக்கிறது.

தர்பூசணி, மிகவும் குளிர்ச்சியான ஒரு தாகம் தீர்ப்பான். 92% தண்ணீர்ச்சத்துக்களையுடையது. மேலும் இந்தப் பழத்தில் மாபெரும் அளவில் Glutathione இருப்பதால், அது நம் உடம்பின் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

மேலும் இது lycopene என்னும் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் ஒரு oxidant இன் முக்கிய ஆதார மாகவும் உள்ளது. தர்ப்பூசணியில் உள்ள மற்றச் சத்துக்கள் விட்டமின் சி பொட்டாசியம் ஆகியவையும் உள்ளன.

கொய்யா, பப்பாளி இவை இரண்டுமே விட்டமின் சி நிறைந்தது. உயர் விட்டமின் சி கொண்ட பழங் களைத் தேர்வு செய்தால் சந்தேகத்துக்கிடமின்றி வெற்றி பெறும் தகுதியுடையவை.

கொய்யாப்பழம் நார்ச்சத்து அபரிமிதமாக உள்ளதால் மலச்சிக்கலைத்தடுக்க உதவுகிறது.

பப்பாளிப்பழம் Carotene சத்துக்கள் நிறைந்தது எனவே கண்களுக்கு மிகவும் நல்லது.

உணவிற்குப் பிறகு குளிர்ந்த தண்ணீர் அல்லது பானங்கள் குடிப்பது புற்றுநோயை உண்டாக்கும்.

**உமா மகேசுவரி**

# முப்பத்தைந்து மொழிகள் பேசும் தமிழ் ஆசிரியர்

இங்கிலாந்தைச் சேர்ந்த ஆண்ட்ரியா வித்தியாசமான ஆசிரியர். கைவினை, கணக்குப்பாட ஆசிரியரான இவருக்கு இந்திய மொழிகளும் தெரியும். இந்தி, தமிழ், குசராத்தி, போர்த்துக்கீசு, அரபிக், உருது, சோமாலி உட்பட முப்பத்தைந்து மொழிகள் பேசுகிறார். மேலும் பதினைந்து நாட்டு மொழிகளைக் கற்றுக் கொண்டிருக்கிறார். ஆண்ட்ரியாவிற்கு இதர நாட்டு மொழிகள் மீது ஆர்வம் ஏற்படக் காரணம்? இவர் ஏன் வித்தியாசமான ஆசிரியராக அறியப்படுகிறார்? என்பதை அவரே சொல்லக் கேட்போம்.

“நான் பணியாற்றும் ஆல்பர்டன் கம்யூனிட்டி பள்ளி பிரபலமானது. உலகநாடுகளில் இருந்து இங்கிலாந்திற்கு புலம் பெயர்ந்தவர்களின் குழந்தைகள், இந்தப் பள்ளியில் அதிக அளவில் படிக்கிறார்கள். குறிப்பாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் தடுமாறும் குழந்தைகள் இங்கு அதிக அளவில் சேருகிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்காகவே அவர்களது தாய் மொழிகளைக் கற்றுக் கொண்டேன். ஆசிரியர் பணியுடன் பிற மொழிகளைக் கற்றுக்கொள்ளும் முயற்சி சிரமத்தை ஏற்படுத்தினாலும் அதன்மூலம் பல மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்த முடியும் என்ற உற்சாகம் என்னை ஊக்கப்படுத்தியது. அதனால் குறுகிய காலகட்டத்திற் குள்ளாகவே 35 மொழிகளைக் கற்றுக் கொண்டேன்.” என்பவர், ஆங்கில மொழியை கற்க தடுமாறும் மாணவர்களிடம் அவர்களது தாய்மொழியிலேயே பாடம் நடத்துகிறார். குறிப்பாக தமிழ் வழிக் கல்வி என்றால் ஆண்ட்ரியாவிற்கு ஆர்வம் பொங்குகிறது.

அப்படி அகதிகள் போல் இடம் பெயர்ந்து வந்தவர்களிடம் முறையான ஆங்கிலத்தை எதிர்பார்க்க முடியாது. அதனை உணர்ந்திருப்பதால், அவர்களின் தாய்மொழியிலேயே பாடம் நடத்துகிறேன். பாடம் நடத்தும் ஆசிரியராக மட்டுமின்றி, அவர்களது சிறந்த தோழியாகவும் விளங்குகிறேன்” என்பவரின் ஆசிரியப் பணி பள்ளிக்கூடத்துடன் நின்றுவிடவில்லை. மாணவர்களின் வீடுகளுக்குச் செல்வது அவர்களது பெற்றோரிடம் அன்பு பாராட்டுவது, ஆங்கலத்தில் பின் தங்கி இருப்பவர்களுக்கு வீட்டிலேயே பாடம் நடத்துவது, இங்கிலாந்து அரசின் சலுகைகளை முறையாக வாங்கிக் கொடுப்பது போன்ற உதவிகளையும் செய்து வருகிறார். அதனால் ஆண்ட்ரியாவுக்கு உலகின் சிறந்த ஆசிரியர் என்ற பட்டமும் வழங்கப்பட்டிருக்கிறது. அரபு நாடுகளில் ‘குளோபல் டீச்சர்’ விருதையும் பெற்றிருக்கிறார். அதனுடன் 6.5 கோடி ரூபாய் பரிசுத் தொகையும் ஆண்ட்ரியாவிற்கு கிடைத்திருக்கிறது.

“இங்கிலாந்திற்கும் புலம் பெயர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு வீட்டுப்பாடங்கள் கொடுப்பதில்லை. ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் பள்ளிக்கூடம் முடிந்ததும் பகுதி நேர வேலைகளுக்குச் சென்று விடுவார்கள். அதனால் அவர்களுக்கான வீட்டுப்பாடங்களை, பள்ளி வகுப்பு நேரங்களிலேயே படிக்க வைத்துவிடுவேன்.

மேலும் படிப்பு, வேலை... என பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகளுக்காக பிரத்யேக வகுப்புகளையும் நடத்துகிறேன். பள்ளிப்பாடங்களுடன், நடனம், இசை, ஓவியம், தற்காப்புக் கலைகள், மொழி அறிவு... போன்ற பல விசயங்களையும் கற்றுக் கொடுக்கிறோம். இது என் தனிப்பட்ட முயற்சி மட்டும் அல்ல. மற்ற ஆசிரியர்களும் ஒத்துழைக்கிறார்கள். அதனால்தான் எனக்குக் கிடைத்த சிறந்த ஆசிரியர் விருதை சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

மேலும் இதன்மூலம் கிடைத்த பரிசுப் பணத்தையும் உலகக் குழந்தைகளின் கல்விக்காகச் செலவிட இருக்கிறேன்” என்று கூறும் ஆண்ட்ரியாவை, இங்கிலாந்து பிரதமர் தெரசா மே, இங்கிலாந்து அரச குடும்பத்தினர் என பலரும் பாராட்டியிருக்கிறார்கள். இவர்களின் ஊக்கம், ஆண்ட்ரியாவை மென் மேலும் சிறந்த ஆசிரியராக செயல்பட வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

---

***புன்னகை***

*இயற்கையின் மாற்றங்களால்*
*பூக்கும் மலர்களிடமும் இல்லை*
*வாழும் மனிதர்களிடமும் இல்லை*
*தவழும் குழந்தைகளிடம் மாறவில்லை*
*அன்பு எனும் புன்னகை*
.....................................................

***மரணம்***

*தினம் தினம் பூக்கும் மலர்களிடம்*
*தெரிந்து கொண்டேன்*
*மரணம் என்பதை*
,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

***மனைவி***

*துணைவியும் நீயே!*
*சுமைதாங்கியும் நீயே!*
*நட்புகளும் உறவுகளும் சில்லரையால்*
*நிரம்பியது*
*நீயோ என் காதல் எனும் சிலந்தி வலையால்*
*பின்னியது*
*நீயொரு கோயில் நானொரு பூசாரி*
,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

**கட்டுமாவடி வை.பழனிவேல்**

*Donate Blood* *Donate Eyes*

JAALADHI FOUNDATION

*Support Forever*
Regd. No. 4/2019

# JALADHI FOUNDATION

**Inaugurated on : 9-1-2019 @ 7.00 p.m.**

**Chairman : JAALADHI UMASANKAR, Thiruttani.**

**Chief Guest : MR. SEKAR**

**Deputy Superintendent of Police, Thiruttani.**

---

Jaladhi foundation started in 09-01-2019.Our founder JaladhiUmasankar, the world he sees is unique and vision is only by his thought expressed via speech. It is not the reflection of the world most of us are able to see but of his own, he is visually challenged.

One can live with what is given by the almighty, our founder leaped and lived not only with what he heard but also made others listen.

Eye sight is absent for him, still he can feel the good world with service and happiness which ensure optimistic mind. Let the divinity spread and live.JaladhiUmasankar 36, is into service for more than 10 years now. Interestingly, His blindness is a blessing in disguise, as he developed interest in service when he lost his vision to Retinitis Pigmentosa, a hereditary condition that damages the optic nerve. At the age of 10 he had partial blindness and gradually he lost his vision thoroughly. This depression made him to divert his focus on service.psychiatrist DR. Dr. N. Shalini MBBS, DPM,PhD, FIPS, mind focus hospita lVanakaram, Chennai, is helpful in handling depression and focusing mind towards this service. He spent much time in his neighboring Jaladhi foundation, where he understood that his interest was service. In 2002 , he underwent a training programme on Orientation and Mobility at National Institute of the Visually Handicapped by Central Government of India that developed his clear understanding of his capability as a visually impaired person. The inspiring stories of people like him helped him to overcome his obstacles with a brave face. As a first step, he became an event organizer at temples in Tiruttani and that paved him a way to get contact with Mrs PadmaPramodkumar daughter of K.Viswanath(film director).The turning point came in his life, when he entered service. This successful attempt made him toomany successful events. Despite a lot of challenges in life, he has triple master degrees as his educational qualification. Our Guru Professor Mrs. P. Beena Anil kumar M.A,MPhil, PHd,(Department of english) SDNB vaishnav college for women Chromepet Chennai is a blessing to him since she helped him to do all activities in educational and service ,supported him as a mother with morality and spirituality. Another guru Professor MrsG.Pratha Mahesh M.A ,MPhil (Department of english),Mar gregorios college Mogappair, Chennai as a sister and Mrs.S.Gayathri Shakthirajan B.Sc agriculture ,Team leader Dhan Foundation in Madurai, as a family well wisher from age of study to till now. Our wellwisher Mrs. MeiammaiMurugapan, Murugapa groups Chennai. With all their blessing, today he is strong person to overcome challenges and concentrate on service oriented activities. His strong knowledge in organizing is truly an inspiring story.Though faced various turmoil in his life, he braved all the challenges and reached the pinnacle of glory with the blessings of almighty and well wishers.He is being called Helen Keller among his friends.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**





JALADHI FOUNDATION THIRD EVENT

The Third event was conducted in Government Girls Higher secondary school, Thiruttani on 25-01-2019, Students performed Drama ,cultural dance ,Speech competition on the basis 9th Anniversary National voter's day , poetry and solo singing performance. Badge, Belts and scarf were issued to 100 JRC students. Chief guest for the event was DSP Mr. Sekar, Thiruttani. Participants RTO V. Bavanandhi, Thasildar, M. Chengala. Chief guest were DSP ,Mr. Sekar Thiruttani, Deputy Thasildar Madhi Alagan, Thiruttani VAO, Head mistress Mrs Theminah Granap and school teachers with more than 1500 students.



MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

# கவிஞர் கவிபாஸ்கர் நூல்கள் வெளியீடு



சென்னைப் புத்தகக் கண்காட்சி (பன்மைவெளி வெளியீட்டக அரங்கில்) 11.1.2019 அன்று
முற்றம் ஆசிரியரும், அறநெறிமக்கள் கட்சியின் தலைவருமான எழுத்தாளர் விசவனூர் வே. தளபதி அவர்கள்
கவிபாஸ்கர் எழுதிய த"மிழர் மருத்துவம் : சித்தர் பாடல்களும் சித்த மருத்துவமும் "என்ற நூலை வெளியிட்டார்.





சென்னைப் புத்தகக் கண்காட்சி (பன்மைவெளி வெளியீட்டக அரங்கில்) 12.1.2019 அன்று
கவிஞர் கவிபாஸ்கரின் கலகக் குரல், பெருநெருப்பு ஆகிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.
நூல்களை இயக்குநர் மு. களஞ்சியம் அவர்கள் வெளியிட லெட்சுமி அம்மாள், இயக்குநர் வானதீபன்,
உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர்.